SRI VENKATESVARA ORIENTAL SERIES—No. 42

EDITOR :—PROF. P. V. RAMANUJASVAMI, M.A.

ஸ்ரீ:

பாஸர் இயற்றிய

# பாலசரிதம்

(நாடகம்)

தமிழ் மொழிபெயர்ப்பு

*மொழிபெயர்ப்பாளர் :*

R. *ஸ்ரீநிவாஸராகவாசாரியர், சிரோமணி,* B.O.L.,

*தமிழ் உதவி ஆராய்ச்சியாளர்*

*திருவேங்கடவன் கீழ்த்திசைக்கலை ஆராய்ச்சிக் கழகம்,*

*திருப்பதி.*

**1953**

*All Rights Reserved*
*By*
*Tirumalai-Tirupati Devasthanams,*
*Tirupati.*

FIRST EDITION.

PRINTED AT
TIRUMALA-TIRUPATI DEVASTHANAMS PRESS
TIRUPATI

# முன்னுரை.

பாஸர் காளிதாஸனுக்கும் முற்பட்டவர். அவர் வடமொழியில் இயற்றியதாகக் கூறப்பெறும் பல நாடகங்களில் பதின்மூன்று நாடகங்கள் இப்பொழுது கிடைக்கின்றன. அவைகளில் ஸ்வப்ன வாஸவதத்தம், ப்ரதிஜ்ஞா யௌகந்தராயணம், அவிமாரகம், சாருதத்தம் என்பவை வழக்கில் வந்துள்ள சரித்திரக்கதைகளை மூலமாகக் கொண்டுவந்தவை. ப்ரதிமா, அபிஷேகம் என்பவை இராமாயணத்தை மூலமாகக் கொண்டவை. பஞ்சராத்ரம், தூதவாக்யம், மத்யமவ்யாயோகம். தூதகடோத்கசம், கர்ணபாரம், ஊருபங்கம் என்பவை மகாபாரதத்தை மூலமாகக் கொண்டவை. பாலசரிதம் என்பது கிருஷ்ணன் பாலலீலையைப் பற்றியது. கிருஷ்ணன் கம்ஸனைக் கொன்று உக்ரஸேனரை அரசனுக்கும் வரையிலுள்ள கதைப் பகுதி இப் பாலசரித நாடகத்தின் கதை. மகாமகோபாத்யாய ஸ்ரீமான் கணபதி சாஸ்த்ரிகள் அவர்கள் இப் பதின்மூன்று நாடகங்களை முதன் முதலாக அச்சுக்குக் கொண்டுவந்தவர். பாஸரே இந்நாடகங்களை இயற்றியவர் என்று சிலரும், அன்றெனச் சிலரும் கூறுகின்றனர்.

மகாகவி காளிதாஸர் பாஸரைப் புகழ்கின்றார். காளிதாஸருடைய புகழ்ச்சிக்குரிய பெருமை இந்நாடகங்களில் இருக்கின்றதென்பது விவாதத்திற்குரிய விஷயம். இதிகாஸ புராணங்களை முதல் நூலாகக் கொண்டு எழுதப் பெற்ற கீழ்க் கூறிய சில நாடகங்களில் முதல் நூலுக்கு முரணான சில விஷயங்கள் உள்ளன. நாடக நூலாசிரியர் உலகியலுக் கேற்குமாறு கதைப் பகுதிகளை மாற்றியமைப்பது இயல்பதுதான். ஆயினும் பயனற்ற மாறுபாடுகள் செய்வது தகுதியன்று. அத்தகைய மாறுபாடுகள் இந் நாடகங்களில் காணப் பெறுகின்றன. அத்தகைய பயனற்ற மாறுபாடுகளைப் பாஸர் செய்திருப்பார் என்று கூறுவது பாஸரையும் அவரைப் புகழும் காளிதாஸரையும் குறைத்துப் பேசுவதாகும். ஆதலின் பிற்காலத்தவர் எவரோ ஒருவர் செய்த நாடகங்கள் இவை என்று கூறுவதே முறை என்று சிலர் கருத்து.

## பால சரிதம்.

1. சூத்திரதாரன் கூறும் முதல் சுலோகத்தின் வாயிலாக இராமன் துவாபர யுகத்திலும், கிருஷ்ணன் கலியுகத்திலும் அவதரித்ததாக இந் நூலாசிரியர் கூறுகிறார். இராமன் திரேதாயுகத்திலும் கிருஷ்ணன் துவாபர யுகத்திலும் அவதரித்தனர் என்று புராணம் கூறும். இராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் உடல் நிறத்தில் முறையே பச்சை கருப்பு என்ற வேற்றுமையைக் காண்கின்றார் இந் நூலாசிரியர். புராணமவ்வாறில்லை.

2. கிருஷ்ணன் அவதரிப்பதற்கு முன்பே நான்முகன் முதலிய தேவதைகள் நாரதர் முதலிய முனிவரோடு மதுரைக்கு வந்து தேவகியின் கருவிலுள்ள திருமாலைப் புகழ்ந்து போயினர் என்று பாகவதம் கூறும். கிருஷ்ணன் அவதரித்த பிறகு நாரதர் தனியே வந்து வணங்கிப் போவதாகப் புராணம் காணவில்லை. கிருஷ்ணன் பிறந்த பிறகு நாரதர் தனித் தோற்றத்தோடு கதை தொடங்குகிறது.

3. கிருஷ்ணன் யசோதையின் எட்டாவது குழந்தை என்று புராணம். ஏழாவது குழந்தை யென்று பால சரிதம் கூறுகின்றது.

4. பிறந்த குழந்தையை வசுதேவர், நந்தன்முதலிய எவரும் அறியாமல் நந்தகோகுலத்தில் விட்டுவந்ததாகப் புராணம் கூறுகின்றது. வசுதேவர் நந்தனிடம் கொடுத்து விட்டு வந்ததாகப் பால சரிதம் கூறுகின்றது.

5. வசுதேவர் உயிருடனிருந்த நந்தகோபன் பெண்ணை எடுத்து வந்ததாகப் புராணம் கூறுகையில், இறந்த தன் பெண்ணை நந்தகோபன்எடுத்துவந்து சுடலையில் போட்டுவிட அங்கு குழந்தையோடு வந்திருந்த வசுதேவர் தன் குழந்தையை அவனிடம் கொடுத்து அவனை அனுப்பிய பிறகு மறுபடியும் உயிர்த்தெழுந்த அப்பெண் குழந்தையைத்தான் எடுத்துக் கொண்டு வந்ததாகப் பாலசரிதம் கூறுகின்றது. இதை யொட்டி அப்பெண் குழந்தை ஒருமுறை யிறந்து பிழைக்கின்றது.

6. சக்ரம் சங்கம் முதலிய ஐம்படைகள் தோற்றமும், சூலம் குண்டோதரன் முதலியவர்கள் தோற்றமும் புராணத்தில் இல்லை. பாலசரிதத்தில் காணப்படுகின்றன.

7. புலைக்கன்னியர் (மதூக முனிவரின்) சாபம் முதலியவை களின் தோற்றம் புராணத்தில் இல்லை. பால சரிதத்தில் காணப் படுகின்றது.

8. காளியன் என்ற பாம்பு கொழுப்படக்கப்படுவது முதலிய அனேக ஸம்பவங்கள் நடை பெற்ற பிறகு, உத்தவர் கிருஷ்ணனை மதுரைக்கு அழைத்துப் போவதற்கு முன்னால், கேசி என்கிற அசுரன் குதிரை யுருவுடன் வந்து:அழிவதாகப் பாகவதம் கூறுகின்றது. கேசிவதம் ஆன பிறகு காளியமர்தனம் பால சரிதத்தில் வர்ணிக் கப் பெறுகின்றது.

9. காட்டில் கோபியர்களுடன் கிருஷ்ணன் தனியாக ராஸ க்ரீடை செய்ததாகப் பாகவதம் கூறுகையில், ஆயர்கள் நடுவில் கோபியர்களுடன் 'அல்லீசகம்' என்ற ஆட்டம் ஆடியதாகப் பால சரிதம் கூறுகின்றது.

10. துருவசேனன் பாலாகி முதலிய பாத்திரங்கள் பாகவதம் முதலிய புராணங்களில் காணப் பெறவில்லை. பாலசரிதத்தில் கல் பிக்கப் பட்டிருக்கின்றன.

11. அரிஷ்டாசுரன் என்ற எருத்திற்கும் கிருஷ்ணனுக்கும் நடந்த சண்டையைப் பாலசரிதம் புதிய முறையில் கல்பித்து வர் ணிக்கின்றது.

12. காளியமர்தனத்திற்குப் பிறகு அரிஷ்டாசுரவதம் புரா ணத்தில். பாலசரிதம் முறையை மாற்றிக் கூறுகின்றது.

இவையும் இவை போன்றவைகளான பிற கல்பனைவேறு பாடுகளும் பால சரிதத்தில் காணப்படுகின்றன. படிப்பவர் தாமே இவ் வேற்றுமைகளைக் கண்டறியவியலும். ஆனமையின் இம்முன் னுரையில் அவைகளை விரிவாகக் கூறவில்லை. சில மாறுபாடுகள் நாடகக் காட்சிக்கு ஒத்தவையாயிருக்கலாம். எல்லாம் அத்தகை யவே யெனக் கூறவியலாது. எளிய நடையில் பெருமைக்கும் குறைவின்றி இந் நாடகநூல் எழுதப்பட்டிருக்கிறது.

சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்தில் ஆய்ச்சியர் குரவை யில் கருப்பத்தில் "ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் வேல் நெடுங்கண் பிஞ்ஞையோடாடிய குரவையாடுதும் யாமென்றாள் கறவை கன்று துயர் நீங்குக வெனவே," என்ற பகுதியில் இப் பாலசரிதம்

குறிப்பிடப் பெற்றிருக்கிறது. ஆதலின் இது சிலப்பதிகார காலத்திற்கு முற்பட்டது என்று கூறவேண்டி யிருக்கின்றது. என்றும், 'வாலசரிதை நாடகம்' என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பெறுவது பாஸர் இயற்றியதாகக் கூறப்பெறும் பாலசரித நாடகமாகவே யிருக்கக் கூடுமென்று தோன்றுகிற தென்றும், ஆதலின் அவ்வடமொழி நாடகத்தை இப்பொழுது தமிழில் மொழிபெயர்த்தல் நலலது என்றும் கூறிக் காலஞ் சென்ற ஸ்ரீமான் வித்வான் தி. பொ. பழனியப்பப் பிள்ளை, பி. ஓ. எல்., தலைமை ஆராய்ச்சியாளர் திருவேங்கடவன் கீழ்த்திசைக் கலையாராய்ச்சி மன்றம், திருப்பதி. அவர்கள் என்னை இப்பணியில் ஊக்கினர். உடனே பெரும் உவகையுடன் அவர் ஆணையை நிறைவேற்ற வெண்ணித் தொடங்கினேன். இந்நாடகத்தில் நான் இயற்றியுள்ள சில கவிதைகளை அவர்கள் பார்த்தார்கள். 'எளிய நடையும், விறுவிறுப்பும் நிறைந்த கருத்தும் கொண்டவைகளாக உங்கள் பாட்டுக்கள் அமைந்திருக்கின்றன. குலசேகர ஆழ்வார் பாட்டுப் போல் காண்கின்றன. ஐயமச்சமேதுமின்றி எழுதுங்கள்' என்று என்னை ஊக்கினர். உற்சாகத்துடன் எழுதி முடித்தேன். ஆயின் அவர்கள் காலமாய் விட்டனர். ஆயினும் புத்தகம் முடிந்து வெளிவருகிறது. பிழைகள் இருக்கக் கூடும். குறைகள் இருக்கக்கூடும். தமிழ்த் தாயும் தமிழ் மக்களும் இந்நூலும் தமிழ்க் கல்வியுலகத்திற்கு ஒரு 'உறுப்பு' என்று உவகையுடன் ஏற்பர் என்று நினைக்கிறேன். பொறுமையுடன் என் பணிகளைக் கவனித்து உதவிய எங்கள் கீழ்த்திசைக்கலைமன்றத் தலைவர் P. V. ராமானுஜஸ்வாமி M.A., அவர்களுக்கு என் மனமார்ந்த வணக்கம். இப் பணியை இனிது நிறைவேற்றித் தந்த தேவஸ்தானம் அச்சகத் தலைவர் T. R. நரஸிம்மம் அவர்களுக்கு என் நன்றி யுரித்தாகுக. கீழ்த்திசைக்கலைவளர்ச்சியில் வேற்றுமையின்றிக் குன்றா ஊக்கம் காண்பிக்கும் தேவஸ்தானம் தலைவர் C. அண்ணாராவ், B.A., அவர்கள் எல்லோருடைய அன்பிற்கும் திருவேங்கடவன் திருவருளுக்கும் பாத்திரமாகுக

இங்ஙனம்,

மொழிபெயர்ப்பாளர்.

# பிழையும் திருத்தமும்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 22 | வசுதேவருடன் | (வசுதேவருடன்?) |
| 3 | 1 | படைத்தேரன் | படைத்தோன் |
| 6 | 9 | எருதுகளின் | எருத்துக்களின் |
| 9 | 5 | நுகக்க | நுகர்க்க |
| 10 | 1 | பிளந்துக் | பிளந்து |
| 10 | 12 | எ்ருதை | எருத்தை |
| 11 | 27 | வகைத்தீமை | வகைதீமை |
| 12 | 18 | காத்தளித்தல் | காத்தருளல் |
| 14 | 1 | புலமடந்தையர் | புலக்கன்னியர் |
| 15 | 9 | கிளம்பி | கிளப்பிப் |
| 15 | 15 | கருவூலக்கத்துள் | கருவூலத்துள் |
| 17 | 10 | விடுகிறான் | விடுகிறது |
| 21 | 16 | மருள் | மறம் |
| | 27 | தளிர | சிறுபிரம்ப |
| 29 | 22 | உலகழிக்க | உலகளிக்க |
| 36 | 17 | முத்திறல் | மாதிறல் |
| 37 | 23 | தரக்கி | தாக்கி |
| 39 | 1 | பணியாள் | பணிப்பெண் |

## நாடக பாத்திரங்கள்.

(ஆண்பால்)

நாரதர்—தேவரிஷி.

வசுதேவர்—இராம கிருஷ்ணர்களின் தந்தை.

நந்தகோபன்—இராம கிருஷ்ணர்களின் வளர்ப்புத் தந்தை. நந்த கோகுலத்தின் தலைவன். வசுதேவரின் தோழன்.

உக்கிரசேனன்—கம்ஸனுடைய தந்தை.

தாமோதரன்—கிருட்டினன்.

பலராமன்—கிருட்டினனுக்கு முற்பிறந்தவன். வசுதேவரின் புத்திரன்.

கருடன்—திருமாலின் ஊர்தி.

ஆழி—சக்கரம் எனும் ஆயுதம்.

சங்கு—சங்கமெனும் ஆயுதம்.

வில்—சார்ங்கமெனும் வில்.

கத்தி—நந்தகமெனும் கத்தி.

அரசன்—கஞ்சன் (கம்ஸன் மதுரைத் தலைவன்).

சாணூரன், முட்டிகன்—கஞ்சனுடைய மல்ல வீரர்.

பணியாள்—துருவசேனன் என்பவன். கஞ்சன் வேலைக்காரன்.

காஞ்சுகீயன்—பாலாகி யென்பவன்.

சாபம்—(மதூக முனிவரின்) வசைமொழி. (தேவதை).

எல்லாரும்—காவலாட்கள்.

குண்டோதரன், தூலன், நீலன், மனோசவன்—காத்தியாயனியின் பரிசனங்கள்

ஆயர் கிழவன்—நந்த கோகுலத்திலுள்ள ஓரிடையன்.

தாமகன்—நந்த கோகுலத்திலுள்ள மற்றோரிடையன் வயதில் சிறியவன்.

அரிட்டாசுரன்—காளை யுருவங்கொண்ட ஓரசுரன்.

காளியன்—யமுனை மடுவில் இருந்த ஓர் பாம்பு.

(பெண்பால்)

தேவகி—வசுதேவரின் மனைவி. கிருட்டினனைப் பெற்ற தாய்.

பணிப்பெண்—தேவகியின் வேலைக்காரி. (வாயிற்காப்பாள்).

தாதி—மாயப் பெண்குழந்தையின் செவிலித் தாய்.

புலைக்கன்னியர்—சாபத்தைச் சேர்ந்த பெண்கள்.

காத்தியாயினி—நந்தகோபன் பெண் (வசுதேவரால் எடுத்து வரப்பட்டவள்)

அனைவர்—(கோஷ சுந்தரி முதலிய ஆயர் சிறுமிகள்)

ராஜ்ய லக்ஷ்மி—கம்ஸனின் ராஜ்ய தேவதை.

பணிப்பெண்—கம்ஸன் மாளிகை வாயிற்காப்பாள். மதுரிகை யென்பவள்

கௌமோதகி—கதையெனும் ஆயுதம்.

—— :o: ——

ஸ்ரீ:

பாஸர் இயற்றிய

# பால சரிதம்

(நாடகம்)

(தமிழ் மொழி பெயர்ப்பு)

## முதல் அங்கம்

*(நாந்தியின் முடிவில் சூத்திரதாரன் தோன்றுகிறான்)*

சூத்திரதாரன்—

*சங்கெனப் பாலென வெண்ணிற மேனியன்*
*தங்கிய நாரணப் பெயரன்முன் னூழியில்*
*பொங்கிழு வுலகளந் தவனிரண் டாவதில்*
*தங்கமீ தென்னதோர் மேனியன் வாமனன்*
*மங்கைகொ ளிலங்கையர் மன்னனைக் கொன்றதோர்*
*செங்கையன் மூன்றினில் நீலனி ராகவன்*
*மங்குமிந் நான்கினில் மைநிற மாயவன்*
*மங்கள முங்களுக் காயவ னுக்குக.* 1

*பெரியோர்களிடத்தில் யான் இவ்வாறு விண்ணப்பம் செய்து கொள்கிறேன். ஆ! இதென்ன? நான் விண்ணப்பம் செய்ய முயலும் பொழுது ஒலியொன்று ஒலிப்பதுபோல் தோன்றுகின்றது! ஐயா! தெரிந்து கொள்கிறேன்.*

*(திரைக்குள்)*

*—யான் வானில் திரிபவன்.*

சூத்திர—இருக்கட்டும். தெரிந்தது.

*பொழியும் பூமழை யிடையினிலே*
*முழங்கு தூரியம் நடுவினிலே*
*விழைந்து கண்ணனைக் கண்டிடவே*
*குழைந்துளம் நாரதன் தோன்றினனே.* 2

(சூத்திரதாரன் வெளியேறுகின்றான்)

பிரத்தாவனை

(நாரதர் தோன்றுகிறார்)

நாரதர்—யான் வானில் திரிபவன். மூவுலகங்களும் என்னை யற் யும். கலகமிழைக்க விரும்பிப் பிரமலோகத்தினின்றிங்கு வந்துளேன்.

ஐயன்மீர் !

மறுக்கமின்றி வாழுமவ் வரக்கர்வான வர்குழாம்
வெறுத்துவம் பிழைக்கவே துறக்கம்நின் றிழிந்தனென்.
மறைதவிர்ந்த வேலையில் விரும்பிவீணை மீட்டுவேன்
செறிந்தவைர மூட்டுவேன் நிறைந்தகால மோட்டுவேன்.

மேலும்

நான்முகன் நல்லுரைகளில் கரைபுரண்ட பக்திப் பெருக்குப் தபோவனங்களில் நன்மதிப்பும் உண்மையில் எனக்குண்டு ஆயினும் யாழ் மீட்டுவதிலும், பெரிய பகைகளோடு எளிதில் தீர்க்க வியலாத அஞ்சத்தக்க பெருங்கலகங்களை மூட்டுவதிலுமே எனக்கு அளவுகடந்த ஆவல்.

ஆதலின், உலகமுதல்வனும் முதல்முடிவற்றவனும் கஞ்சனைக் கொல்வதற்காக யாதவகுலத்தில் அவதரித்தவனுமாகிய எம்மிறை நாரணனைக் கண்டு வணங்க வந்துளேன். ஆச்சரியம் ! இப்பெரு மகள் தேவகி மாயையினால் மனிதக் குழந்தையாகிய மூவுலகீசனை எடுத்துக்கொண்டு வசுதேவருடன் வீட்டிலிருந்து மெள்ள வெளிக் கிளம்புகின்றாள்.

இத் திங்கள்முகத்தாள் மிக்க வருத்தமுற்றிருந்தும் சாந் நிலவியவளாகவே காண்கின்றாள். உலகங்களுக்கு அபயம் அளிப் பவனும் தேவதேவனும் அசுரர்களை அழிப்பவனும் ஆழியைக் கையில் தாங்கியவனுமாகிய கண்ணனை மந்தரமலையைப்போல் தன் கைகளில் ஏந்திக் கொண்டு இவ்விரவில் வருகின்றாள்.

பகவான் நாராயணன் இதோ காணப்படுகின்றான்.

எல்லையில் வீர னிவனே யாவன்
எழில்மலர்க் கண்ண னிவனே யாவன்
அமரரு ளமர னிவனே யாவன்
அவுணரை வென்றோ னிவனே யாவன்

உலகு படைத்தோ னிவனே யாவன்
உலக மளிப்போ னிவனே யாவன்
உலக முதல்வ னிவனே
உலகமூன் றொருகொடி யிவனே யாவன். 4

ஆச்சரியம்! கலகத்திற்குக் காரணம் உண்டாய்விட்டது. நானும் இப்பெருமானை வலம் செய்து பிரமலோகமே செல்கின்றேன். முதல்வனே! வணங்குகிறேன்.

நாராயணாய நரலோக பராயணாய
லோகாநநாய கமலாமல லோசநாய
ராமாய ராவணவிரோசன பாதநாய
வீராய வீர்யநிலயாய நமோ வராய. 5

(வெளியேறுகிறார்)
(கைக் குழந்தையுடன் தேவகி தோன்றுகின்றாள்)

தேவகி—ஐயோ! குழந்தை பிறந்த பொழுதுண்டாகிய பெரிய சுப நிமித்தங்கள் என் பிள்ளையின் பெருமையை நன்குணர்த்துகின்றன வென்பதறிந்தும் நல்வினையில்லா நான் கொலைகாரனும் கஞ்சனை நினைத்தஞ்சுகின்றேன். என் கணவன் எங்கு சென்றிருப்பார். அம்ம! களிப்பும் வியப்பும் தோன்ற மலர்ந்த கண்களுடன் இதோ இவ்விடமே வருகின்றார்.

(வசுதேவர் தோன்றுகின்றார்)

வசுதேவர்—(ஆலோசனையுடன்) என்னிது? கடும்புயலும் கொடிமின்னலும் கலந்து கார்முகில்கள் கருச்சிக்கின்றன. மண்ணுலகு முழுதும் அதிர்ந்து சுழல்வதுபோல் தோன்றுகின்றது. மாயவசுரர்குழாத்தை யழித்து மக்களைக் காப்பதற்காக மாயவனே இம்மண்ணுல் தோன்றியுள்ளான். இது திண்ணம்.

(பார்த்து) இதோ தேவகி! கையில் தன் எழாவது குழந்தையை ஏந்திக்கொண்டு வருகிறாள்.

கருவுயிர்த்த உருதுயரம் காண கில்லாள்
பெரியபல சுபநிமித்தம் கண்டுவந்தாள்
அருளின்றித் தன்சிறுவ ரழித்த கஞ்சன்
மரணமுறப் பழிவாங்கு முளத்தாள் வந்தாள். 6

தேவகி—(நெருங்கி) நாத! வெற்றியுறுக.

வசுதேவர்—தேவகி! நடுநிசியல்லவா? மதுரையில் மக்களனைவரும் உறங்குகின்றனர். ஆதலின் ஒருவரும் அறியாமுன் குழந்தையை யெடுத்துக் கொண்டு நகர்ந்து விடுகிறேன்.

தேவகி—இக் குழந்தையைத் தாங்கள் எங்கே கொண்டு போவீர்கள்?

வசுதேவர்—தேவகி! நன்கு கேட்டனை. எனக்கும் தெரியவில்லை. கொடிய கஞ்சன் ஒரு குடை நிழற்கீழ் இந்நிலவுலகை ஆள்கின்றான். நீடுவாழுமிக் குழந்தையை எங்கு கொண்டு போகலாம். விதி விடும்வழி குழந்தையைக் கொண்டு போகின்றேன்.

தேவகி—நாத! குழந்தையைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளவும்.

வசுதேவர்—தேவகி! குழந்தையிடத்தில் அளவுகடந்த அன்பு வைத்துளாய்.

இராகுவின் வாயில் அகப்பட்ட இவ்விளந் திங்களைக் காப்பதெங்ஙனம்? நீ எவ்வளவு காப்பாற்றியும் பயனில்லை. கஞ்சன் காலனுவான்.

தேவகி—எவ்வகையினும் ஆகப்போவதில்லை.

வசுதேவர்—நீ யுரைத்தவுரை தேவர்களனைவரும் உரைத்த வுரையாகட்டும். குழந்தையைக் கொண்டுவா.

தேவகி—இதோ குழந்தையை வாங்கிக்கொள்ளுங்கள்.

வசுதேவர்—நல்லது. (வாங்கிக் கொண்டு) குழந்தை மிகவும் கனமாயிருக்கின்றது. விந்தியமும் மந்தாரமும்போல் மிகப் பொறையுள்ள இத் திருவளர் கமலக் கண்ணனைத் தன் திருவயிற்றில் தாங்கிய இந் நங்கையின் துணிவே துணிவு. தேவகி! நீ உள்ளே செல்.

தேவகி—நல்வினையற்ற நான் இதோ செல்கிறேன்.

(உள்ளே சென்றுவிடுகிறாள்)

வசுதேவர்—வானிலும் நீரிலும் வேறு வேறாகப் பிரிந்து விளங்கும் இளந்திங்கட் பிறைபோல் இத்தேவகி உள்ளமிங்கும் உடம்பு

கள் உள்ளேயுமாக இரண்டாகப் பிரிந்தவள்போல் செல்கிருள். ஆ! தேவகி உள்ளே சென்றுவிட்டாள். நானும் நகரவாயிலை அடைகிறேன்.

முன்பிறந்த குழவிகளை முனிந்து மன்னன்
கொன்றதினுல் சினமுடையே ஞயி னும்யான்
இன்றவனை யஞ்சியிரு கைக ளால்என்
அன்பிணைமந் தரமதுபோல் எடுத்துச் செல்வேன். 7

(சிறிது தூரம் சென்று) இதோ நகரவாயில். நுழைந்து செல்கிறேன். (நுழைந்து) ஆச்சரியம்! மதுரையில் மக்களனைவரும் உறங்கிக் கொண்டிருக்கின்றனர். எழுவதற்குள் வெளியேறிவிடுகிறேன். (வெளியேறி) மதுரை நின்றும் வெளிக்கிளம்பிவிட்டேன். ஆ! திரண்ட வல்லிருள்.

உடலெங்கு மிருட்படலம் படிந்த தொத்த
மிடல்வானம் மைமழையைப் பொழிந்த தொத்த
கடையரிடம் பணிவிடைசெய் வதனை யொத்து
நடுநிசியில் விழிபார்வைப் பயனி ழந்த. 8

என்னே இருளின்வன்மை! திசைகள் ஒளியிழந்தவை போலும், தருக்கள் திரண்டொன்ருகிவிட்டனபோலும் தோன்றுகின்றன. நன்கு அமைக்கப்பட்ட இவ்வுலகம் உருமாறிவிட்டது. அடியெடுத்துவைக்க வியலவில்லை. இதென்ன விந்தை. தீவட்டி வெளிச்சம் காண்கிறது! ஒருக்கால் அக்கொடிய கஞ்சன் நான் வெளியில் செல்வதை யறிந்து என்னைப் பிடித்துக் கொள்ள வந்து கொண்டிருப்பானே? இருக்கட்டும். நான் இவன் கொழுப்பை யடக்குகிறேன். (வாளையுருவித் திரும்பி நோக்கி )என்ன! ஒருவரும் காணப்படவில்லை. என்ன விந்தை!

" இருளடர்ந்த திவ்வுலகு
நெறியறியா துழல்வேன் "
எனநினைந்து சிறுவனிவன்
பெரியவொளி செய்தான். 9

இதோ வழி யிருக்கின்றது. செல்கின்றேன். ஐயோ! இவ் யமுனையாறு காலமழையால் நிரம்பிப் பெருகுகின்றது. என் முயற்சி யெல்லாம் வீணுயிற்று. என் செய்வேன்— இருக்கட்டும்—தெரிந்துவிட்டது.

கரவுட னரவுகள் கலந்து வைகுமிப்
பெருந்திரை யருந்திறல் யமுனை யாற்றினைக்
கரமெனும் படகினால் கடந்து காரியப்
பொறைநிறை வேற்றுவேன் தெய்வ முள்ளதேல்.

(இறங்கி நீந்த முயன்று வியப்புடன்) என்னே! வெள்ளம் இரண்டாகப் பிளந்துவிட்டது. மேற் பகுதி நிலைத்து நிற்கின்றது. கீழ்ப் பகுதி ஓடுகின்றது. இக்கடவுள் யாறு எனக்கு வழி விட்டு விட்டது. கடப்பேனாக. (இறங்கி) யமுனையைக் கடந்துவிட்டேன். எருதுகளின் முக்கார ஒலிபோ லல்லவா கேட்கின்றது. நல்வினையற்ற நான் இடைச்சேரியின் அருகில் இருப்பது நன்றாய்த் தெரிகின்றது. ஆகா! அருகிலுள்ள இவ்விடைச் சேரியிலல்லவா என் தோழன் நந்தகோபன் உறைகிறான். முன்பு கஞ்சன் ஆணையால் நான் அவனை விலங்கிட்டுச் சாட்டையா லடித்திருக்கிறேன். சேரியின் உள்ளே செல்கின்றேன். ஒருக்கால் இரவில் வசுதேவன் வந்திருக்கிறான் என்று இடையர்கள் அஞ்சக் கூடும். ஆதலின் இவ் வால மரத்தினடியில் தங்கி இரவின் முடிவை எதிர்பார்க்கிறேன். ஆலில் உறையும் அணங்குகளே! இச்சிறுவன் உலகின் நன்மைக் காக்கக்கஞ்சனைக் கொல்ல விருட்டிணி குலத்தில் தோன்றியது உண்மையாயின் சேரியிலிருந்து ஒருவன் இங்கு வரட்டும். இல்லை இல்லை. என் தோழன் நந்தகோபனே வரட்டும்.

(பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு நந்தகோபன் வருகிறான்)

நந்தகோபன்—மகளே! மகளே! எங்கள் வீட்டுச் செல்வத்தையும் விரும்பாமல் எங்களையும் விட்டுவிட்டு இப்பொழுதே போகிறாயே! எருமைக் கிடாக்கள் மந்தையாகக் கூடியது போல் இந்த இருட்டு பலமாக இருக்கிறதே; மழை கொட்டுகிறதே; நிலா வெளிச்சமும் தெரியவில்லையே; கறுப்புச் சேலையைக் கட்டிக்கொண்ட கருநிற இடைச்சி உடம்பையும் நன்றாயிழுத்துப் போர்த்துக் கொண்டு தூங்குவதுபோல் இவ்விரவு இருள் சூழ்ந்து கிடக்கின்றதே! இந் நடுநிசியில் என் மனைவி யசோதை பெற்ற என் பெண்—ஐயோ! பிறந்ததும் இறந்துபோய் விட்டதே! நாளைய தினம் நம் சேரியில் இந்திர விழா நடக்க வேண்டுமென்பதனால் இவ்வருத்தம் இடையர்களுக் ' தெரிய வேண்டாமென்று நானே கால்விலங்கை

யும் பொருட்படுத்தாமல் (உன்னை) எடுத்துக் கொண்டு வந்து விட்டேன். யசோதை—பாவம்—பிறந்தது பிள்ளையா பெண்ணா என்று கூடத் தெரிந்து கொள்ளவில்லை. உணர் விழந்துவிட்டாள். மகளே! மகளே!

வசுதேவர்—யாரிவன் இவ்வாறிரவில் அழுகிறான்? பாபம் இவனும் நம்மைப் போன்றிருக்கிறான்.

நந்தகோபன்—எங்கள் வீட்டுச் செல்வத்தையும் விரும்பாமல் எங்களையும் விட்டு விட்டுச் செல்கின்றாயே!

வசுதேவர்—குரல் நன்கு விளங்குகின்றது. என் தோழன் நந்தகோபனாகத்தா னிருக்க வேண்டும். கூப்பிட்டுப் பார்ப்போம். தோழா! நந்தகோபா! இங்கே வா.

நந்தகோபன்—(பயத்துடன்) ஐயோ! இவனொருவன் தெரிந்த குரலில் நந்தகோபா நந்தகோபா என்று கூப்பிடுகிறான். அரக்கனாயிருப்பானா? ஒரு வேளை பிசாசாயிருக்குமா? நடுங்க வைக்கும் நடு நிசி. கையில் இறந்த குழந்தையொன்று; என்ன செய்வேன்?

வசுதேவர்—நந்தகோபா! வேறுவகையான ஐயம் வேண்டாம். இங்கே வா.

நந்தகோபன்—(செவியைச் செலுத்திக் கவனத்துடன்) அம்மா! குரலைப் பார்த்தால் நம் தலைவர் வசுதேவர் என்று தோன்றுகின்றது. இருக்கட்டும் போகின்றேன். ஆனால் அவரிடத்து எனக்கு என்னவேலை? மன்னன் கஞ்சன் வார்த்தையைக் கேட்டுவிட்டு 'நான் தவறு செய்தேன்' என்று கூறி என்னைச் சாட்டையாலடித்து விலங்கிட்டவரல்லவா இவர். ஆதலின் போகமாட்டேன். ஆனால் என்னைத்தான் "கொடியனென்று திட்டிக்கொள்ள வேண்டும். ஆயிரமாயிரமாக நன்மைகள் செய்திருக்கின்றார். நான் வருந்தினால் வருந்துகிறார். இன்புற்றால் இன்புறுகிறார். அரசன் ஆணைக்கடங்கி ஒருமுறை விலங்கிட்டார் என்றே நினைக்கிறேன். அருகில் செல்கின்றேன். குழந்தை யிருக்கின்றதே! என் செய்வேன்? இருக்கட்டும். இம்மாதிரி செய்கிறேன். (நெருங்கிப்பார்த்து வியப்புடன்) பொழுது விடிந்துவிட்டது. இதோ என் தலைவர்

வசுதேவர் ஆண் மகவைக் கையில் ஏந்திக்கொண்டு நிற்கின்ருர். (அருகில் சென்று) வெற்றியுறுக. தலைவனே! வெற்றியுறுக.

**வசுதேவர்**—தோழா! நந்தகோபா! பெருமைவாய்ந்த உன் பசுக்கள் நன்ருயிருக்கின்றனவா?

**நந்தகோபன்**—ஆம். தலைவனே! நன்ருயிருக்கின்றன.

**வசுதேவர்**—உன் பணியாட்கள் சுகமா?

**நந்தகோபன்**—பணியாட்களா? ஆம். சுகமாகவே இருக்கின்றனர்.

**வசுதேவர்**—தோழா! மறைக்கின்ருயே அது என்ன?

**நந்தகோபன்**—ஒன்றுமில்லை.

**வசுதேவர்**—என் உயிர்மேல் ஆணை. உண்மையைச் சொல்.

**நந்தகோபன்**—வேறு வழியில்லை. தலைவனே! கேளுங்கள். இன்று நள்ளிருள். என் மனைவி—இல்லை இல்லை—உங்கள் பணிப் பெண்—யசோதை பெண்மகவீன்ருள். பாவம் அக்குழந்தை பிறந்ததும் இறந்து விட்டது. நாளை எங்கள் இடைச்சேரியில் இந்திர விழாவென்னும் திருவிழா நடக்கப் போகின்றது. அதனல் இவ்வருத்தம் இடையர்களுக்குத் தெரிய வேண்டாமென்று நான் ஒருவனுகவே கால்விலங்குடன் இக் குழந்தையை யெடுத்துக் கொண்டு வந்தேன். யசோதை, பாவம், பிறந்தது பெண்ணு பிள்ளையா வென்றுகூட வறியாது மயங்கிக் கிடக்கிருள்.

**வசுதேவர்**—உலகியலைத் தாங்கி நிற்கும் மறலியை ஏமாற்ற முடியாது தோழா! கட்டையாய்விட்ட இவ்வுடலை விட்டுவிடு.

**நந்தகோபன்**—முடியவில்லை. தலைவ! முடியவேயில்லை.

**வசுதேவர்**—இது உலகியல். விட்டுவிடு.

**நந்தகோபன்**—தலைவர் உத்தரவுப்படியே செய்கிறேன். பெண்ணே! பெண்ணே! (அழுகிருன்.)

**வசுதேவர்**—தோழா! வேண்டாம். அழவேண்டாம். எழுந்திரு.

**நந்தகோபன்**—(எழுந்து வசுதேவரை யடைந்து) தலைவரே! வெற்றி பெறுக. இவ்வடிமை ன்ன செய்ய வேண்டும்.

**வசுதேவர்**—தோழா! அக்கொடிய கஞ்சன் என் ஆறுகுழந்தைகளையும் கொன்றுவிட்டது உனக்கும் தெரியுமல்லவா!

**நந்தகோபன்**—தெரியும். ஐயனே! தெரியும்.

**வசுதேவர்**—இச் சிரஞ்சீவி ஏழாவது குழந்தை. பிள்ளையின்பம் நுகக்க நான் நல்வினை செய்யவில்லை. நீ செய்த நல்வினையாலேனும் இக்குழந்தை பிழைக்கட்டும். பெற்றுக் கொள்.

**நந்தகோபன்**—அஞ்சுகிறேன். ஐயனே! அஞ்சுகிறேன். 'வசுதேவர் குழந்தை நந்தனிடம் வைப்பாய் வளருகின்றது' என்று கஞ்சன் அறிவானாயின்—பல பேசி யென்? என் தலை போய்விடுமே.

**வசுதேவர்**—(தனக்குள்) ஐயோ?, காரியம் கெட்டுவிட்டது. எதையும் வாய்விட்டுச் சொன்னால் தான் மூர்க்கர் அறிவர். ஆதலின் இவ்வாறு கூறுகின்றேன். (வெளியில்) தோழனே! நந்தகோபா!

> நானுனக்கு நல்லுதவி முன்பளித்த துளதேல்
> நீயெனக்குப் பதிலுதவி யியற்றவிது காலம். 11

**நந்தகோபன்**—என்ன என்ன! பதிலுதவி யென்றா? கஞ்சனாயிருக்கட்டும். கஞ்சன் அப்பா உக்கிரசேனனாகத் தானிருக்கட்டுமே குழந்தையைக் கொடுங்கள் ஐயனே!

**வசுதேவர்**—தோழா! பெற்றுக்கொள்.

**நந்தகோபன்**—தலைவ! நானிப்பொழுது தூயனல்ல. இறந்த குழந்தையை எடுத்துக் கொண்டு வந்தேனல்லவா? சற்றே பொறுங்கள். அதற்குள் யமுனைக்குச் சென்று சுத்தி செய்து கொண்டு வருகிறேன்.

**வசுதேவர்**—தோழா! இடைச் சேரியில் உறைவதால் இயற்கையாகவே நீ தூயன்.

**நந்தகோபன்**—அவ்வாறாயின் எங்கள் இடைச்சேரிக்குரியமுறையில் மண்ணால் தூய்மை செய்து கொள்கிறேன்.

**வசுதேவர்**—இதில் என்ன தவறு. சுத்தி செய்துகொள்.

**நந்தகோபன்**—தங்கள் உத்தரவு. (அவ்வாறு செய்து வியப்புடன்) விந்தை. விந்தை. ஐயனே! விந்தை. மண்ணிற்காகப் பூமி

யைத் தோண்டினேன். பூமியைப் பிளந்துக் கொண்டு நுகத் தடி பருமன் நீர்த்தாரை கிளம்பிற்று.

வசுதேவர்— சிறுவன் மகிமையே. சுத்தி செய்து கொள்.

நந்தகோபன்—அப்படியே. (சுத்தி செய்து கொண்டு வசுதேவரை அணுகி) தலைவனே! இதோ இருக்கின்றேன்.

வசுதேவர்—குழந்தையைப் பெற்றுக் கொள்.

நந்தகோபன்—ஐயனே! மந்தரமலைபோன்ற இக் குழந்தையைத் தாங்க என் கையில் வலியில்லை.

வசுதேவர்—தோழா! நீ மிகுந்த உடல்வலியும் வீரமும் வாய்ந்தவனல்லவா?

நந்தகோபன்—ஐயனே! என்னுடல்வலிமையையும் வீரத்தையும் கேளுங்கள். முட்டிக் கிழிக்கவரும் எருதைக் கொம்பைப் பிடித்து விலக்கி விடுவித்துக் கொள்ளுவேன். சேற்றில் அழுந்திய சுமை வண்டிகளை ஒருவனுகவே கரையேற்றுவேன். இத் தகைய நான் இக் குழந்தையைத் தாங்க முடியவில்லை.

(ஐம்படைகளும் கலுழனும் தோன்றுகின்றனர்)

**கருடன்—**

யானேயவ் வஞ்சிறையன் யானேயவ் வணிகருடன்
யானேயம் மாதவனூர் வேகமிகு வூர்திகொடி
யானேயம் மாதவனைத் தேவாசு ரச்செருவில்
யானுய்த் தரித்தவனும் அத்தேவின் வலியுற்றே.

**ஆழி—**

மாதவன்தன் கைநுனியில் மணியாழி யானேன்நான்
ஆதவன்தன் கடும்வெம்மை யமைந்தவொளி கொண்டேன்
ஓதக்க டல்கடைந்தான் ஓங்கி யுலகளந்தான் [நான்
பாதகர்அத் தானவரை யென்னையூக்கிக் கொன்றிட்டான். 12

**வில்—**

விட்டுவின் கரத்துறைந்த வட்டநுண் மருங்குடை
மட்டிலாண்மை பெண்ணுருப் படைத்தவில்ல தாயினேன்
வெட்டினன் செருத்தலத்தில் துட்டசத்து ருக்களை
பட்டுவீய்ந்த வானைதேர்ப தாதிமா கணங்களே. 13

**கதை**—

*மாயவன் கரத்துறை கௌமோதகி யெனப்பேர்*
*ஆயவள் கதைக்கரசி ஆணையின் அவன்தன்*
*தூயகுண மற்றபகை கொன்றுசெரு வில்யான்*
*மேயினன் அவர்குருதி யாறுவிளை யாடி.* 14

**சங்கு**—*யான் சங்கம் ஆவேன்.*

*பாற்கடலில் தோன்றினேன் பரமனுவந் தெனையேற்றான்*
*ஆர்ப்புமிகு மென்னொலியால் யானழித்தேன் தேவர்பகை.* 15

**கத்தி**—*யான் நந்தகமாவேன்.*

*செருமுகத்தில் எதிரியெனக் கொருபொரு ளுமாகான்*
*உறுபெருமை பரமனொடு சிறங்கிளைவிற் சேர்வேன்.* 16

**ஆழி**—*ஆழி, வில், கதை, சங்கு, கத்தி என்ற நாங்கள் ஐவரும் அசுரரை யழிப்பவர். பரமன் கொலுவிலிருப்பவர். மாயவன் திருவாணைப் பணியாற்ற இங்கு வந்துளோம். (வில் முதலிய வைகளை நோக்கி) ஆதலின் வாருங்கள். நாமும் மனிதவுலகத்தில் தோன்றியுள்ளமாயவனுடைய பிள்ளைவிளையாட்டுக்களைப் பின்பற்றுவதற்காக ஆயர்சிறுவரு ருவுடன் சேரிக்கே செல்வோம்.*

**எல்லோரும்**—*அப்படியே ஆகுக. (கிருட்டினனை யடைகின்றனர்).*

**வசுதேவர்**—*தோழா! இச்சிறுவனை வணங்கு.*

**நந்தகோபன்**—*ஐயா! அப்படியே. அரசிளங் குமர! உன்னைப் பன்முறை வணங்குகிறேன். நீயே உன்னைத் தாங்கிக் கொள்ள வேண்டும். இடையர்களாகிய எங்களுக்கு உன்னை யெடுக்க வலி யேது?*

**ஆழி**—*பெரியோனே! நாரணா! வணங்குகின்றோம். உன்னால் அமரர்களுக்குப் பலவகை நன்மைகளும் அவுணர்களுக்குப் பலவகைத் தீமைகளும் ஏற்பட விருக்கின்றன. யாதவர் குடிக்கொடியே! ஆதலின் இவ்வெளிய நந்தனிடத்தில் அருள் புரிக.*

**வசுதேவர்**—*வாங்கிக்கொள்*

**நந்தகோபன்**—*உத்தரவுப்படி.*

**வசுதேவர்**—*தோழா! பொழுது புலர்ந்தது. நீ திரும்பிச் செல்.*

**நந்தகோபன்**—*விந்தை, விந்தை, தலைவனே! விந்தை, இவ்விலங்குகள் கழன்று விழுந்து விட்டன.*

**வசுதேவர்**—*இவை யெல்லாம் இச்சிறுவன் மகிமை. திரும்பிச் செல்.*

**நந்தகோபன்**—*உத்தரவுப்படி.*

**வசுதேவர்**—*இங்கேவா.*

**நந்தகோபன்**—*ஐயனே! இதோ வந்தேன்.*

**வசுதேவர்**—

*யானறிவேன் உன்னியற்கை யன்பதனை யையா!*
*மானமிகு நேயமதை யிச்சிறுவன் பால்செய்.*
*பாதகனால் என்சிறுவ ரிறந்தொழிந்தார். இன்று*
*யாதவரின் பீசமிவன். காத்தளித்தல் வேண்டும்.* 17

*இச்சிறுவனை வளர்க்க நீ என்செய்வாய்?*

**நந்தகோபன்**—*கேளுங்கள் தலைவனே! ஓரில்லம் நுழைந்து பால் குடிப்பான். மற்றோரில்லத்தில் தயிர் பருகுவான். இன்னுமோர் இல்லத்தில் வெண்ணெய் விழுங்குவான். பிறகு மற்றோர் இல்லம் புகுந்து கன்னல் அருந்துவான். வேறொரு வீடு புகுந்து மோர்க்குடத்தைக் கடைக்கணிப்பான். பல பேசி யென்? எங்கள் சேரிக்கே தலைவனாய்விடுவான்.*

**வசுதேவர்**—*அவ்வாறே யாகட்டும். திரும்பிச் செல்வாயாக.*

**நந்தகோபன்**—*உத்தரவுப்படி.* (போய்விடுகிறான்)

**வசுதேவர்**—*நந்தகோபன் போய்விட்டானல்லவா? நானும் மதுரைக்கே போகிறேன்.* (சிறிது தூரம் சென்று) *என்ன? அழுகைக் குரல்போல் கேட்கின்றது! கஞ்சன்பால் அச்சத்தால் நந்தகோபன் திரும்பிவிட்டானோ?* (சிறிது தூரம் பின் சென்று) *இதென்ன விந்தை! இப் பெண்குழந்தை பிழைத்து விட்டதே! இக்குழந்தையை யெடுத்துக்கொண்டு போய் தேவகியின் கையில் கொடுத்து அக்கொடிய கஞ்சனை வஞ்சிக்கிறேன்.* (எடுத்துக்கொண்டு.) *எவ்வளவு கனம்? இக்குழந்தை குமாரனுக்குச் சிறிது குறைந்த ஒர் பெரியதெய்வம்.*

போகின்றேன். ஆச்சரியம்! இவ்யமுனை முன்போலவே விலகி வழிவிட்டு நிற்கின்றது. செல்கிறேன். யமுனையைக் கடந்துவிட்டேன். இது நகரவாயில். முன் போன்றே மதுரையில் மக்களனைவரும் தூங்குகின்றனர். உள்ளே செல்கிறேன். (சென்று) கஞ்சனுடைய இவ்வரண்மனை மூதேவி பற்றியதுபோலல்லவா காணப்படுகின்றது. நம்முடைய இவ்வீடு திருவுற்று விளங்குகின்றது. உவளகம் சென்று தேவகியைத் தேற்றுகிறேன். கடவுளர் நன்மை பயக்க. (வெளியேறுகிறார்).

முதல் அங்கம் முற்றிற்று.



# இரண்டாம் அங்கம்

(புலைமடந்தையர் தோன்று கின்றனர்.)

புலைக்கன்னியர் (அனைவரும்)—வாங்க சாமி! வாங்க. நாங் கன்னிகழியாத பொம்பிள்ளைகளுங்க. ஒங்களெ கண்ணாள பண்ணிக்க வந்திருக்கோம்.

அரசன்—(நுழைந்து) ஆ! என்ன இது?

மறிகடலிற் பெருந்திரைகள் எழுந்து மோத
மாபெரிய மரக்கலனங் கசையு மாபோல்
சிறந்துயர்ந்த மாளிகைகள் சிதைந்து வீழச்
செவ்விய விந்நிலமடந்தை நடுங்கலென்னே!
சிறுபயனு முறுபயனும் பயத்தல் செய்யும்
தைவீக விக்குறிகள் துய்த்தலுண்டால்
வருநாளில் பெருந்தீமை விளைந்து போமோ
வன்மைமிகு நன்மையெனக் காமோ தேறேன்.

அனைவரும்—வாங்க சாமி! வாங்க. நாங்க கன்னிகழியாத பொ பிள்ளைகளுங்க. ஒங்களெ கண்ணாளம் பண்ணிக்க வந்திரு கோம்.

அரசன்—காவலாட்கள் ஒருவரும் இங்கு திரிந்து கொண்டிருக் வில்லை. தீவர்த்தி யேந்திய பெண்களும் இங்கு சஞ்சரித்து கொண்டிருக்க வில்லை. ஆதலின் கருநெய்தல் போன்று மைபோன்றும் கறுத்து விளங்குபவரும் அஞ்சத்தக்கவ மாய இப்புலைக்கன்னியர் என் வீட்டில் நுழைந்து விட்டன

அனைவரும்—வாங்க சாமி! வாங்க. நாங்க கன்னி கழியாத பொ பிள்ளைகளுங்க. ஒங்களெ கண்ணாளம் பண்ணிக்க வந்திரு கோம்.

அரசன்—ஆச்சரியம். இவ்வாறும் சில புலைக்கன்னியர் படைக்க பட்டிருக்கின்றனர்.

சினந்துயான் பகைத்திரள் கொழுப்பழித் தடக்குவன்.
அனல்செய் ஆதவன்நெருப்பு திங்கள்என் வயத்துள.

அனுங்கும்அச் சமச்சுறுத்து மந்தகற்கு மந்தகன்
தனக்கும்இப் புலைச்சியர் பழிச்சொலால் இழுக்கரோ! 2

புலைக்கன்னியர் வாங்க சாமி! வாங்க.

அரசன்—ஆ! ஒழியுங்கள்—எவ்வாறிவர் உடனே மறைந்து போயி னர். நானும் முன்ளேசெல்கின்றேன்.

(பிறகு சாபம் பிரவேசிக்கின்றது.)

சாபம்—உம். எங்கே இப்பொழுது நுழைகின்றாய்? இவ்வீடு எனக் கல்லவோ உரியதாய்விட்டது.

அரசன்—யாரிவன் முக்கண்ணன் முகத்திலிருந்து கிளம்பி பூவுலக மடைந்த சீற்றமே நரவுருக் கொண்டது போல், மைத்திரள் போன்ற நிறமும், அச்சுறுத்தும் எயிறுகள் இலங்கும் முக மும், கருநாகம் போல் கறுத்துப் பழுத்த கண்களுமாகக் கையில் கொள்ளி யொன்றேந்திக் கொண்டு கருவூலக்கத்துள் சென்று வெளிவருகிறான்? யார் நீ?

சாபம்—என்னைத் தெரியாதா உனக்கு? நான்தான் மதாக முனிவ ரின் சாபம். வச்சிரவாகு வென்பவன்.

கொடியசண்டாளவே[டங்கொண் டுகந்தேன்
நெடியதோர் தலையோடு மாலைபு னைந்தேன்
கடியவ ரசுகஞ்ச னுள்ளத்து றைவான்
சுடலையி டையிருந்து யானிங்கு வந்தேன். 3

அரசன்—நினைத்தற்குமரிய செய்கையை விரும்புகிறாய். உயர்ந்த உச்சிகளும் நெடு முழைகளும் செறிந்து விளங்கும் அழகிய பொன் மேருவைச் சிறு காக்கைச் சிறகுகாற்று அசைப்ப தில்லை. [1] எறிதிரைக் கடல் முழுவதையும் இரண்டு கைகளால் கலக்கி உள்ளங் கையில் எடுத்துக் குடித்துவிட விரும்பும் நீ நகைத்தற்குரியனாகிறாய்.

சாபம்—அறியும் காலம் அண்மையிலுள்ளது.

அரசன்—ஆ! எங்ஙன மிவன் திடுமென மறைந்து விட்டான். நானும் படுக்கையை அடைந்து கண்களுக்குச் சிறிது ஓய்வு கொடுக்கிறேன்.

---

1 'முதலை நிறைந்த கலங்கிய திரைகள் செறிந்த கடலை' என்றும் கூறலாம்.

சாபம்—நல்லது. இவன் தூங்குகிறான். அலக்ஷ்மி! கலஹி! காலராத்ரி! மகாநித்ரே! பிங்கலாக்ஷி! வாருங்கள். உள்ளே செல்வோம்.

புலைக்கன்னியர்—அப்படியே ஆகட்டும்.

(ராஜ்யலக்ஷ்மி பிரவேசிக்கிறாள்)

ராஜ்யலக்ஷ்மி—உள்ளே நுழையக்கூடாது.

சாபம்—யார் நீ?

ராஜ்யலக்ஷ்மி—என்னை யறியாயா? யான் இக் கஞ்சன் திரு.

சாபம்—அப்படியா! ராஜ்யலக்ஷ்மி! நீ விலகி விடு. இவ்வீடு என்னுடையதாகி விட்டதல்லவா?

ராஜ்யலக்ஷ்மி—உம்!

அலைதிரை யகழ்சூழ் என்னுடை யில்லம்
ஆராய்ந் தறியா தெவன்வழி கொண்டு
இவ்விர விடையில் என்னையும் மதியா
நீண்டுநீ நுழைய விரும்பினை அறியாய்!
உறுமொழி யுன்னுட னுடிப் பயனிலை
ஊடே யுறுவிச் சென்றுநீ யடைதல்
என்னுடை யாட்சியி னுள்ளவித் தலத்தை
ஏலா தெவ்வகை யானும்.
ஐய! நீ போவாய் அறிதனு மரிதாம். 4

சாபம்—பகவதி! பதுமத்துறைவாய்! கஞ்சனுடலை விட்டு விலகி விடு. இது நாரணனாணை.

ராஜ்யலக்ஷ்மி—நாரணனாணை யென்கிறான். இனி யெவ்வாறு! ஆ! கஷ்டம்!

நெடுநாள் உடனிருந்தருளிய யான் இன்று இவ்வரசனை விட்டு நீங்கக் கூடவில்லை. இவனுடைய சீரிய குணங்கள் என்னை வருத்துகின்றன. இருக்கட்டும். நாரணனாணை கடக்கவரியது. ஆதலின் யானும் நாரணனருகு செல்கிறேன்.

(சென்று விடுகிறாள்.)

சாபம்—ராஜ்யலக்ஷ்மியும் விலகிவிட்டாள். இவ்வில்லம் நம்முறைவிடமாய் விட்டது. அலக்ஷ்மி! கலஹி! காலராத்ரி! மகாநித்ரே!

பிங்கலாக்ஷி! உள்ளே நுழைந்து உங்கள் மரபிற்குரிய கூத்துக்களைத் துடங்குங்கள்.

புலைக்கன்னியர்—(கஞ்சனை நோக்கி) நீ இன்னீலேருந்து அறநெறி தவறிப்பூடனும்.

(மறைந்து விடுகின்றனர்.)

சாபம்—(கஞ்சனைநோக்கி) எப்பொழுதும் மறநெறி முயன்ற உன்னை இறுகத் தழுவுகிறேன். முனிவரின் வசைமொழியாகிய யான் உன்னை யடைகிறேன். இனி விரைவில் அழிவாய்.

(மறைந்து விடுகிறான்.)

பணிப்பெண்—(நுழைந்து) ஐயா! சயமுண்டாகனும்.

அரசன்—ஆ !!!

பணிப்பெண்—ஐயா! யசோதரேன்று நான்.

அரசன்—யசோதராய்! புலைக்கன்னியர் உள்ளே சென்றதை நீ பார்க்கவில்லையா?

பணிப்பெண்—என்ன? பறச்சிங்களா? ஒங்க காலுண்டெ நித்தம் வாழுற சனங்களே உள்ளெ நொழைய முடியாதே! அப்படிருக்க பறக்குட்டிங்க எப்படி உள்ளெ போமுடியும்.

அரசன்—ஒருக்கால் கனவுகண்டேனோ? யசோதராய்! சென்று கஞ்சுகியின் பிள்ளை பாலாகியை அழைத்துவா.

பணிப்பெண்—ஆணைப்படி. (போகிறாள்.)

(காஞ்சுகீயன் வருகிறான்.)

காஞ்சுகீயன்—வெற்றிபெறுக.

அரசன்—ஐயா! பாலாகி! இன்றிரவு சுழற்காற்று அடித்தது. பூமி அதிர்ந்தது. கொள்ளிகள் வீழ்ந்தன. தெய்வப்பிரதிமைகளும் காணப்பட்டன. எதனால் எதற்காக வென்று சாம்வச்சரிக புரோகிதர்களைக் கேட்டறிந்து வாரும்.

காஞ்சுகீயன்—(சென்றுவந்து) பேரரசே! சாம்வச்சரிக புரோகிதர்கள் இவ்வாறு விண்ணப்பிக்கின்றனர்.

அரசன்—என்ன வென்று?

காஞ்சுகீயன் —கேளுங்கள்.

"வானுறை பூதமொன்று யாதோ ஓர் செய்கை நிமித்தமா இம்மனிதவுலகை யடைந்துளது. நிலவதிர்ச்சி, வானில் துந்து நாதம், முதலிய இம்மாறுபாடுகள் அப்பிறப்பின் விசேடங்க உணர்த்தும் அறிகுறிகள்."

அரசன்—எப்பூதம் பிறப்பின் பெருமைகளுடன் கூடிய இந்நி மங்கை அதிரும்? அப்பூதம் எவருக்குப் பிள்ளையாகப் பிற ந்தது? பிறப்பின் பயன் யாது? அறிந்துவாரும்.

காஞ்சுகீயன்—அரசராணைப்படி. (சென்றுவந்து) பேரரசே! வெற் பெறுக. தேவகியம்மை ஈன்றிருக்கிருள் அல்லவா?

அரசன்—என்ன பிறந்தது?

காஞ்சுகீயன்—பெண் குழந்தை.

அரசன்—இத்தகைய மாபெரும் அமங்களக்குறிகள் ஒரு சிறுபெண் குழந்தையின் பிறப்பு நிமித்தமாக உண்டாயினா!

காஞ்சுகீயன்—அரசே! அருளுக. இதுவரை யான் பொய்யுரைத் தில்லை. செவிலித்தாயின் கையில் அக்குழந்தையை யான் பார்த்தேன். தங்கள் பணிப்பெண்களும் அவளைச் சூழ்ந்து கொண்டிருந்தனர்.

அரசன்—ஐயம் ஏன்? பார்ப்பனராகிய உம்முரை பொய்யாயினும் மெய்யென்றே யான் எண்ணுகின்றேன். சென்று வசுதே வரை அழைத்துவாரும்.

காஞ்சுகீயன்—அரசராணைப்படி. (செல்கிருன்)

அரசன்—இயற்கையில் வசுதேவர் அறவொழுக்க முள்ளவர். உண்மை பேசுபவர். மேலும் என்னருகில் பொய்யுரையார். இருக்கட்டும், கேட்போம்.

(வசுதேவர் வருகிருர்.)

வசுதேவர்—

அறுவரென் சிறுவரு மறிந்தழி வெய்தினர்
உறுதுய ருற்றுயான் உடல்மெலிந் துழலுவேன்
கருணையின் சிறுதுளி யுளத்தி லாதவப்
பெருமக னழைத்திடப் பேதை யேகுவேன். 5

ஆம். உலகியல் இத்தகையது. அஞ்சியவன் அஞ்சாதவன் இருவரும்—முன்னவன் அச்சம் காரணமாகவும் பின்னவன் அச்சமின்மை காரணமாகவும்—அரசனை அணுகவேண்டும். (கஞ்சனை யணுகி) சூரசேனகுலத்தவனே ! உட்காருகிறேன்.

அரசன்—யாதவ குலத்தவரே ! உட்காரும்.

வசுதேவர்—அப்படியே. (உட்கார்ந்த பிறகு) சூரசேனவமிசத் தோனே ! எதற்காக என்னை அழைத்தீர் ?

அரசன்- யாதவரே ! தேவகி பிரசவித்தாளல்லவா ?

வசுதேவர்—ஆம். பிரசவித்தாள்.

அரசன்—என்ன குழந்தை.

வசுதேவர்—(தனக்குள்) யானும் பொய்யுரைக்கவேண்டி வருகின்றது. ஆயினும் புதல்வனைக் காப்பாற்றுவதற்காகப் புகன்ற பொய்யும் மெய்யாகுமென்று நினைக்கின்றேன். என்ன செய்யலாம். இருக்கட்டும். தெரிந்தது (வெளியில்) பெண் குழந்தை பிறந்தது.

அரசன்—ஆண் ஆயினும் பெண் ஆயினும் யான் கொன்றே தீர வேண்டும். ஆண்மையினால் அருவினையை அடக்கியாக வேண்டும்.

(நுழைந்து)

பணிப்பெண்—யசமான் ! சுபம் உண்டாவணும். “ பொறந்தது பொண்ணு. அதலயும் சின்ன கொழந்தெ. ராசா தயவு செய்யணுன்னு நம்ம தங்கை சொல்றுங்க.

வசுதேவர்—சௌரசேன ! எளிய தேவகியின் சொற்படி செய்வாயாக. மகளிர்க்குப் பெண் குழந்தைகளிடம் அன்பு அதிகம்.

அரசன்—யாதவரே ! நீர் செய்துள்ள சூளுறவு உமக்கு நினைவு வருகின்றதா ? மதுரகமுனி எனக்கிட்ட சாபத்தைக் கேட்ட நீவிர் தேவகி பெற்ற குழந்தைகள் எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறேன் என்று என்னிடம் சூளுறவு செய்திருக்கிறீரே ?

வசுதேவர்—சூளுறவா ? மேற் பேச்சில்லை.

பணிப்பெண்—யசமான் ! எங்க யசமானிக்கு நான் போயி என்ன சொல்லட்டும் ?

அரசன்—யசோதராய்! இப்பொழுது நிர்ப்பந்தம் செய்ய வேண்டா மென்றும் வேறு விருப்பத்தைச் செய்கிறேன் என்றும் தேவகி யிடம் சொல்.

பணிப்பெண்—யசமான் உத்தரவு.

அரசன்—யசோதராய்! இவ்வாறு செய்.

பணிப்பெண்—யசமானனே உள்ளே போயி பாக்கவும்.

வசுதேவர்—(தனக்குள்) புதல்வனைக் காப்பாற்றுவதற்காகத் தீவினை யறியா யானுமல்லவோ பிறர் குழந்தையைக் கொல்விக்க நேரு கிறது. என் புதல்வனையே கொடுத்து விடலாமா? ஆயினும்,

மாண்டதொரு பெண்குழவி பின்புயிர்த்து மீண்டாள்
ஆண்டகையன் என்புதல்வன் மாண்பிதுவா மென்றால்
வீண்டகையன் இக்கஞ்சன் வெங்கொடுமை தன்னால்
ஈண்டுமிவள் இறப்புறுவள் என்பதுவும் பொய்யே. 6

யானு மதற்குள் சென்று தேவகியைத் தேற்றுகிறேன்.

(செல்கிறார்)

அரசன்—யசோதராய்! அப் பெண் குழந்தையை எடுத்து வா?

பணிப்பெண்—யசமான் உத்தரவு. (வெளி யேறுகிறாள்.)

பணியாட்கள்—ஆயி! மெள்ள மெள்ள வாங்க. இதோ நடுக்கட்டு வாசப்படி. தாண்டி வாங்க.

(குழந்தையுடன் செவிலித்தாய் தோன்றுகிறாள்.)

செவிலித்தாய்—யசமான்! சுப முண்டாகணும். இதோ குழந்தை. ரொம்ப காலமாக் காப்பாத்தினோம்.

அரசன்—ஆ! மகா ராணியைப்போல் இப்பெண் குழந்தை காணப் படுகின்றது. நானும் பெண்கொலை செய்ய வேண்டி வரு கிறது.

செவிலித்தாய்—மெதுவா. யசமான்! மெதுவா.

அரசன்—இதோ கஞ்சன் கற்பாறை. மறத்தொழிலைத் தொடங்கு வேனாக. முனிவர் வசனத்தால் உண்டான இவ்வேழாம் கரு ஒழிந்தால் என் மனம் கலக்கமறும். (குழந்தையை வாங்கிக் கற்பாறையில் அறைந்து) ஆ! மண்ணகத்தில் ஒரு பகுதி விழ

மற்றொருபகுதி விண்ணகத்தில் கிளம்பிப் படைகள் பொலிந்த கரங்களுடன் என்னைக் கொல்ல வருவது போலல்லவோ இருக்கிறது! ஐயோ! கூர்நுதி வேலை யேந்திப் பயங்கர உருவுடன் காளராத்திரி போல் கிளம்பி நிற்கின்றதே! அழிவு காலம் நெருங்கி விட்டதா?

(காத்தியாயினி பரிவாரங்களுடன் தோன்றுகிறாள்.)

காத்தியாயனி —

*சும்பனை நிசும்பனைக் கனன்று கொன்று நின்றிலென்*
*வம்புலா மதங்கொள் ஆனை வெல்லுமா கிடன்தனைக்*
*கொன்று தெவ்வழித்துதேவ ருக்களித்த பண்பினாள்*
*இன்றுகஞ்ச னைக்குலத்து டன்கழிக்க வந்துளேன்.* 7

என் பெயர் காத்தியாயனி. நான் வசுதேவர் வமிசத்தில் தோன்றியுள்ளேன்.

குண்டோதரன்—

*உமையின்திரு வருளாலுரு குராலும்கொடு தொழிலும்*
*அமைவென்பொரு செருவிற்பகை களைவென்மருள் மெலியும்*
*இமையோர்அரி களைவான்இனி யிப்பூதல மதனில்*
*நிமிர்வானிருந் தியல்வந்ததொர் நனிகுண்டோ தரன்யான்* 8

சூலம்—

*மலைமக ளருளால் ஒளிமிகு முட்லன்*
*இலைமலி சூலன் புவிதல மதனில்*
*வலிமிகு சூரன் தனையுமை குமரன்*
*அலைகட லிற்போல் கஞ்சனை வெல்வேன்.* 9

நீலன் —

*சூரத்தொழில் புரிவேன்—செருவில்*
*சோர்ந்துளம் நொந்தோடேன்*
*நீலனெனப் பெயரன்—நெடுவேல்*
*நாயக னக்குமரன்*
*கோரக் கிரௌஞ்சனைக்—கொன்றெனக்*
*கொற்றக் குறியுடைய*
*வீரனக் கஞ்சனையான்—விரைவில்*
*வென்று கொலைபுரிவேன்.* 10

மனோசவன்—

காற்றினும் கொடிய வேகன் காத்தியா யனிகாப் பாளன்
போர்த்திறம் வல்ல ராய புண்ணிய சனங்கள் தம்மைச்
சாற்றிய செருமு கத்தில் நாணலின் பெரிய போரை
நீற்றுமந் நெருப்பு போல நொடிதனி லழிக்க வந்தேன். 11

காத்தியாயனி—குண்டோதரா! சங்குகர்ணா! மகாநீலா! மனோசவா! வாருங்கள். கண்ணனுடைய இளம்பருவ விளையாட்டுக்களைக் கண்டு துய்க்கக் கோவல ருருவுடன் கோவலர் சேரிக்குள் செல்வோம்.


எல்லோரும்—தங்கள் உத்தரவு.

(பரிவாரங்களுடன் காத்தியாயனி வெளியேறுகிறாள்.)

அரசன்—ஆச்சரியம். பொழுது புலர்ந்துவிட்டது. உள்ளே சென்று தீமைகள் தணிவதற்காகச் சாந்தி சடங்குகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். அப்பொழுதே என்மனம் நிம்மதியுறும்.

(எல்லோரும் வெளியேறுகின்றனர்.)

## இரண்டாம் அங்கம் முற்றிற்று.



# மூன்றும் அங்கம்

(ஆயர்கிழவன் தோன்றுகிறான்.)

ஆயர்கிழவன்—அடேய் மேகதத்தா! டேய் விடபதத்தா! டேய் கும்பதத்தா! டேய் கோடதத்தா! டேய்! மாட்டு மந்தெய மடக்கி ஓட்டுங்கடா ஓட்டுங்க. விருந்தாவனத்தில் வேண்டிய தண்ணியெ குடிச்சூட்டு மொக்காரம் போட்டுகிணல்ல வருது மந்தை மாடுங்களும். இந்தக் காளெயப்பாரேன். மந்தெ லேருந்து கெளம்பி வழியிலே பாம்பு புத்தை முட்டிக் கௌப்பி மண்ணுட்டம் இருக்கிற்பாம்புகளக் குத்திக் கிழிச்சு கொவள மாலெங்க மாதிரி கொம்பிலே மாட்டிக்கினு வருது. தோ ஒரு காளெ வாலெ ஆகாசத்திலே சொயட்டி தூக்கிகினு மொயங் காலெ மடக்கி நுணிக் கொம்பாலெ பூமியெக் குத்திக் கெளப்பூடும் போலே வருதெ சந்தரன் போலெ வெள்ளெ வெளேல்னு. சரி. தாமகனெக் கூப்பட்றென். டேய் தாமகா! இந்தப் பசு மாட்டுங்களெ கண்ணுக் குட்டிங்க ளோடெ நல்ல பசுந்தரெல ஓட்டி வுட்டூட்டு இங்கே வா.

தர்மகன்—ஆச்சரியம் பா! நம்ம யசமான் நந்தகோபனுக்கு எவ்வளவு பசும்புல்லு பூமி. புள்ளெ பொறந்ததிலேருந்து நம்ம சந்தோசம் என்ன ஆச்சரியமா நாளுக்கு நாளு வளருது. மாட்டு மந்தெ இங்கயே இருக்கட்டும். மாமனிண்டே போறேன். மாமா! நமஷ்காரம்.

ஆயர்கிழவன்—நமக்கும் இந்த மாட்டு மந்தெக்கும் சவுக்கியம் உண்டாகட்டும். சவுக்கியம் உண்டாகட்டும்.

தாமகன்—மாமா! கோபாலன் பொறந்த நாள்ளேருந்து நம்ம மாடு கண்ணுவ எல்லாம் நோய் நொடி ஒண்ணுமில்லாதெ சவுக்கியமா இருக்கு. தோண்டின எடத்தெல்லாம் கெழங்கு, ஏறின மரத்தெல்லாம் பழம், பாத்த பொத்ரெல்லாம் தேனு, கறந்த பாலெல்லாம் அப்படியே நெய்யி. எல்லா எடயருக்கும் நாளுக்கு நாள் சந்தோசம் அதிகமாவுது.

ஆயர்கிழவன்—அது கெடக்கட்டும். இந்த ஆச்சரியத்தெப்பாரு. கோபாலன் பொறந்து பத்தே நாளு. பூதனென்னு ராக்கசி ஒத்தி மொலெல்ல வெஷம் தடவிக்கிணு யசோதெ மாதிரி வேசம் போட்டுகிணு வந்தா. வந்து கொழுந்தயெ எடுத்து அதும் வாயிலெ மொலயெ வச்சா. அதைத் தெரிஞ்சுகிணு கொழுந்தெ பாலோடெ உசிரயும் உறிஞ்சூட்டது. ராக்கச உருவத்தோடெ விழுந்து செத்தா அவ.

அப்புறம்·கொழுந்தெய்க்கு ஒரு மாசம் நொம்பெல்லெ, அதுக்குள்ளே சகடன்னு ஒரு ராக்கசன் வண்டி உருவம் எடுத்துகிணு வந்தான். கொழுந்தெ அதெத் தெரிஞ்சுகிணு காலாலெ ஒரு ஒதெ வுட்டு அந்த வண்டியெப் பொடி யாக்கிட்சு. அவனும் ராக்கச உருவத்தோடெ விழுந்து செத்தான்.

மாசம் வளர வளர கோபாலன் ஒரு ஊட்லெ போயி பாலு குடிப்பான். இன்னொரு ஊட்லெ போயி தயிரு குடிப்பான். இன்னொரு ஊட்லெ போயி வெண்ணெ விழுங்குவான். வேறெ ஊட்டுக்குப் போயி பாவஷம் சாப்பிடுவான். அப்பறம் ஒரு ஊட்டுக்குப் போயி மோர்க் கொடத்தெ பாப்பான். கோவம் வந்து எடெச்சிங்கள்ளாம் யசோத கிட்டெ சொன்னாளுவ. அவளும் கோவிச்சுகிணு ஒரு கயித்த எடுத்து கோபாலன் இடுப்பிலெ கட்டி இன்னொரு நுணியெ ஒரல்ல கட்டிப் போட்டா. கொழுந்தெ அந்த ஒரலெயும் இழுக்கவெ அந்த ஒரலு ரெட்டெக் கடப்ப மரத்து நடுவுலெ மாட்டிகிச்சு. அந்த மரம் ரெண்டும் ராக்கசப் பசங்க. ஒண்ணாப் போயி நெருக்க ஆரம்பிச்சானுவ. நம்ம யசமான் கொழுந்தெ ஒரலெ வேகமா இழுத்துது. வேருங்களயுமா மரம் ரெண்டும் நொருங்கி விழுந்தது. அத்தோடெ அந்த ராக்கசப் பசங்க ஒழிஞ்சானுவ. கொழுந்தெ வீலுவயும் சாமார்த்யத்தையும் பாத்து எடய ரெல்லாம் அவனுக்கு தாமோதரன்னு பேர் வச்சாங்க.

கோபாலனுக்கு ஓடித்திரிஞ்சு வெளயாட்ற· வயசு வந்துது. பெரலம்பன்னு ஒரு ராக்கசன் நந்தகோபன் உருவத்தோடெ கோகுலத்துக்கு வந்து பலராமனெ எடுத்து தோள்ளெ வச்சுகிணு போக ஆரம்பிச்சான். அதெத் தெரிஞ்சுகிணு பலராமன் அவன் தல்லெ ஒரு குட்டு குட்டினான். கண்ணு புதுங்கி அவன் ராக்கசு உருவத்தோடெ விழுந்து செத்தான்.

ஒருநா கிஷ்ணன் எடப்பசங்களோடெ பனம்பழத்துக்காவ பனங்காட்டுக்குப் போனன். தேனுகன்னு பேராம் ஒரு ராக்கசன் கழுத வேசத்தோடெ அங்க வந்தான். நம்ம யசமான் கிஷ்ணன் அதத் தெரிஞ்சுகினு எடது காலெப் புடிச்சுத் தூக்கி அந்த கழுத யெப் பனமரத்துமேலெ எறிஞ்சு பனம்பழங்களெ உதுத்தான். அவனும் ராக்கச வேசத்தோடெ வுழுந்து செத்தான்.

கேசீன்னு ஒத்தன் குதிர வேசத்தோடெ வந்தான். அதயும் தெரிஞ்சுகினு கிஷ்ணன் குதரெயப் புடிச்சு தம் மொழங்கை வரைக்கும் அதும் வாயிலெ வுட்டான். ரெண்டா பொளந்துபோயி அந்தக் குதரெ ராக்கச உருவத்தோடெ கீழெ வுழுந்து செத்துது.

இந்தமாதிரி எத்தனயோ காரியம் கிஷ்ணன் செய்திருக்கான்.

**தாமகன்**—மாமா! அதெல்லாம் இருக்கட்டும். இப்பொ கிஷ்ணன் எடக்குட்டிங்களோடெ பிருந்தாவனத்துக்கு வந்து அல்லீசகம் வெளயாடப் போருன்.

**ஆயர்கிழவன்**—அப்படியானு நாம்ப எல்லா எடயங்களோடெயும் சேந்து கிஷ்ணன் அல்லீசகம் வெளயாட்றத்தெ பாப்பொம்.

**தாமகன்**—மாமஞ் சொல்றுப்பலெயே.

(செல்கின்றனர்.)

பிரவேசகம்.

(மறுபடியும் தோன்றி)

**ஆயர்கிழவன்**—

பாலு கொடுக்கும் பசுமாடு
 லோகத் தாயீன்னு நீங்க நெனயுங் கடீ
காலப் பொழுதிலெ வந்திரிச்சி
 அதெக் கழுவிக்கு ளிப்பாட்டிக் கும்பி டுங்க
நாளும் நெறஞ்சு சுகமாக
 நல்லா நம்ப எடச் சேரிருக்கு தடீ
கோலஞ் செய்துகொண்டு குட்டிங்களா
 நீங்க கூட என்னோடெ காட்டுக்கு வாங்க.

டீ கோசசுந்தரி! அடியெ வனமாலெ! சந்திரலேகெ! டீ மிருகாச்சி! வாங்கடி சீக்கிரம். தப்பட்டெ அடிக்கப் போவோம்.

(எல்லாரும் வருகின்றனர்.)

எல்லாரும்—மாமா! கும்பட்ரேம்.

ஆயர்கிழவன்—குட்டிங்களா! இதோ தாமோதரன் பால்வெள்ளை பலராமனோடவும் மத்த எடப்பசங்களோடவும் கூடிக்கினு கொகெலேருந்து சிங்கம் வராப்பலெ வரானே.

(தாமோதரனும் பலராமனும் இடைச்சிறுவர்களுடன் வருகின்றனர்.)

தாமோதரன்—(ஆச்சரியத்துடன்) ஆச்சரியம். இயற்கையில் வனப்புமிக்க இவ்வாயர்சிறுமியர் அழகிய கோலமும் பூண்டு விளங்குகின்றனர்.

பான்மொழியர் இலங்குழையர் குவளைக் கண்ணர்
கான்மலர்க ளணிந்தகருங் கூந்த லாளர்
தேனிலங்கு மரைமுகத்தர் செம்பொன் மேனி
ஆனிரையர் சிறுமியரிங் காடு கின்றார். 2

பலராமன்—இடைச் சிறுவர்களும் இதோவந்து விட்டனர். எருதுக்கள் விருந்தாவனச் சேரியில் முக்காரம் போடுகின்றன. சில ஆயர்சிறுவர் டிண்டிமம் முதலிய மங்கள வாத்தியங்களை முழக்கிக் கொண்டு களிப்புடன் கோலாகலம் செய்து கொண்டிருக்கின்றனர். தாமரை மலர்போன்ற முகமும் கண்களுமுடைய சில ஆயர்சிறுவர் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். சிலர் விழிப்பொடும் பெருங் களிப்பொடும் நின்று கொண்டு பாடுகின்றனர்.

ஆயர்கிழவன்—ஆமாம். எல்லாரும் தயாரா வந்தூட்டாங்க.

தாமகன்—யசமானே! சயம் உண்டாகட்டும்.

பலராமன்—தாமக! ஆயர் சிறுவரனைவரும் வந்துவிட்டனரா?

தாமகன்—ஆமாம் யசமானே! எல்லாரும் தயாரா வந்தூட்டாங்க.

தாமோதரன்—கோஷஸுந்தரி! வனமாலே! சந்த்ர ரேகே! ம்ருகாக்ஷி! நம் சேரிக்குத் தகுந்த அல்லீசக நாட்டியமாடுங்கள்.

அனைவரும்—யசமான் உத்தரவுப்படி.

பலராமன்—தாமக! மேகநாத! இசைக்கருவிகளை இயக்குங்கள்.

இருவரும்—யசமான்! அப்படியே.

ஆயர்கிழவன்—சாமீ! நீங்க அல்லீசகம் ஆட்றீங்க. நான் இங்கு என்ன பண்றது.

தாமோதரன்—நீ பார்வையாளனல்லவா?

ஆயர்கிழவன்—அப்படியே சாமீ!

(அனைவரும் ஆடுகின்றனர்.)

ஆயர்கிழவன்—ஹிஹ்ஹிஹ்ஹீ. நல்லா பாட்றுங்க. நல்லா வாசிக்கிறுங்க. நல்லா ஆட்றுங்க. நானும் ஆட்றென். (ஆடி) ரொம்ப களப்பால்லவோ இருக்கு.

(நுழைந்து.)

இடையன்—ஐயோ! ஐயோ! யசமான்! இந்த எடத்தெ வுட்டுப் போங்க.

தாமோதரன்—தாமக! ஏன் இவ்வாறு பரபரப்பு?

இடையன்—இதோ அரிட்டவிடபன்ற ராக்கசன் இடிதொண்டு வராப்பல தங்கொளம்புகளாலெ மண்ணெக் கௌரித் தள்ளிகிறு.........அவன் மொக்காரத்தெக் கேட்டு இடி இடிக்கிதுன்னல்லொ நாங்க சந்தேகப் பட்டொம்.

தாமோதரன்—அப்படியா! வந்துவிட்டான் அரிட்டன். (பலராமனைப்பார்த்து) நம்முடைய இவ்வாயர்சிறுமிகளையும் சிறுவர்களையும் அழைத்துக்கொண்டு இம்மலைச் சிகரத்தில் ஏறி, அங்கிருந்து கொண்டு இக்கொடியனுக்கும் எனக்கும் நடக்கும் யுத்தத்தைத் தாங்கள் கவனியுங்கள். நான் இவன் கொழுப்பை அடக்குகிறேன்.

(பலராமன் சிறுவர் குழாத்துடன் செல்கிருன்.)

தாமோதரன்—இதோ இத்துட்டன் அரிட்ட விடபன் காளையுருவுடன் குளம்புகளால் தரையைப் பிளந்துகொண்டும் கொம்புகளால் ஆற்றங்கரைகளைக் குத்திக் கிளப்பிக்கொண்டும் முக்காரம் செய்து கொண்டு ஓடி வருகிருன். இடையர்கள் அச்சத்துடன் பார்க்கின்றனர்.

(அரிஷ்டவ்ருஷபன் பிரவேசிக்கிருன்.)

அரிஷ்டவ்ருஷபன்—அடேய்! பகைவனைக் கொன்றழிப்பதற்காகக் கொழுப்புமிக்க எருத்துருவம் பூண்டுளேன். கூரிய கொம்புகளின் முனைகளிலிருந்து கிளம்பும் கிரணங்களாலேயே இவ்வானத்தைச் சின்னபின்னமாகக் கிழித் தெரிந்துவிடுவேன். அச்சமின்றி ஒய்யாரமாகக் கர்ச்சித்துக்கொண் டிருக்கும்

பகைவனை இப்பொழுதே கொன்று தள்ளி இப்பிருந்தாவனத்தில் இனிதாகத் திரிவேன்.

முக்கார வொலிகேட்டு மங்கை மார்கள்
தக்கணமே கருகழுவக் கலங்கி நிற்ப
வக்கரக் குளம்புநுனி பிறை குறிப்ப
விக்காடார் நிலமங்கை நடுங்கு கின்றாள். 3

நந்தகோபன் மகன் எங்கு சென்று விட்டான். அடேய்! நந்தகோபன் மகனே! எங்கே இருக்கிறாய்?

**தாமோதரன்**—அடே எளிய எருதே! இங்கே. இங்கே. இதோ நின்று கொண்டிருக்கிறேன்.

**அரிஷ்டவ்ருஷபன்**—(கிருட்டினனைப் பார்த்து) விந்தை! இச் சிறு பயல் மிகுந்த மனவுறுதி படைத்தவனாய் இருத்தல் வேண்டும். மிக்கவலியும் பயங்கர உருவும் படைத்துப் பெருமுழக்கம் செய்யும் என்னைக் கண்டு இவன் அஞ்சவுமில்லை. ஆச்சரியம் எய்தவுமில்லை.

**தாமோதரன்**—அடேய்! என் செவிபட அச்சமென்று ஒன்று கூறினாயே அப்பொருள் எத்தகையது? அஞ்சியவர்களின் அச்சத்தைப் போக்கி அபயம் அளிக்கவே நான் இப்புவியில் பிறந்துளேன்.

**அரிஷ்டவ்ருஷபன்**—அடேய்! நீ சிறுபயல். ஆகையால்தான் அச்சமென்பது என்னவென்று அறியாம லிருக்கின்றாய்.

**தாமோதரன்**—அட எளிய எருதே! என்ன! சிறுபயல் என்று என்னை அவமதிக்கின்றாயே? சின்னஞ் சிறியதாயினும் கருநாகம் கடித்த மனிதன் இறந்துபோக வில்லையா? வேலன் குழந்தைப் பருவத்தில் கிரௌஞ்ச மலையை அடித்துப் பிளக்க வில்லையா? இருக்கட்டும். அறிவிலி! இதைக்கேள். உறுதி மிக்க கற்பாறைகள் செறிந்த பெருமலை தளிரளவுள்ள வச்சிரப்படையால் வீழ்த்தப்பட வில்லையா?

**அரிஷ்டவ்ருஷபன்**—அடே! நந்தன்மகனே! என்ன எண்ணிக் கொண்டிருக்கின்றாய்?

**தாமோதரன்**—உன்னை யமபுரத்துக்கு அனுப்ப வேண்டு மென்று.

**அரிஷ்டவ்ருஷபன்**—முடியுமா?

தாமோதரன்—ஐயமென் ?

அரிஷ்டவ்ருஷபன்—ஆயின் உன் சாதிக்குரிய படையை எடுத்துக் கொள்.

தாமோதரன்—அடேய் ! படை யென்ரு ? மலைபோல் பருத்து வலி மிகுந்து வளர்ந்த உறுதிமிக்க தோள்களுடன் கூடிய இவ்விரு கைகளே எனக்குப் போதும். வலிவற்ற உன் போன்றவர் களுக்கல்லவா படை தேவை. பெருந்தடி போன்ற என் கைகளால் உன்னைக் குமைத்து மண்ணில் வீழ்த்தாவிடின் நான் தாமோதரனில்லை.

அரிஷ்டாஸுரன்—அங்ஙனமாயின் போர் துடங்கட்டும்.

தாமோதரன்—அடேய் ! எளிய எருதே ! இதோ ஒற்றைக்காலால் நிற்கிறேன். உனக்கு உண்மையில் வலிமையிருந்தால் என்னை இவ்விடம் நின்று அசை பார்ப்போம்.

அரிஷ்டாஸுரன்—சந்தேகம் என்ன ! (முட்டித்தள்ள முயுற்சித்து மயங்கி விழுகிருன்.)

தாமோதரன்—அடேய் ! எருதே ! சற்று இளைப்பாறு. இளைப்பாறு. இந்த வலிமைக்காகத்தான இவ்வளவு செருக்கு ?

அரிஷ்டாஸுரன்—(இளைப்பாறித் தனக்குள்) ஆ ! இச் சிறுவன் நம்மை யெதிர்த்தால் நாம் தாங்குவதென்பது இயலாத செயல்.

உலகழிக்கு முருத்திரனே ? ஒண்படையிந் திரனே ?
உலகழிக்கத் தோன்றியதோ ருபேந்திரனு வானே ?
இலதிலதென் னெண்ணமெலாம் தவறுளதே யாகும்.
அலகில்வலி யிச்சிறுவ னப்பெருமா னவான். 4

ஆ ! நாம் எங்கெங்கு பிறந்துளோமோ அங்கங்கு நம்மைக் கொல்வதற்காக மூவுலகங்களையும் காக்கும் மதுசூதனன் காத்திருக் கின்ருன். இருக்கட்டும். இப் பெருமானல் கொல்லப்படும் எனக்கு அழிவற்ற உலகம் கிடைப்பது திண்ணம். ஆதலின் போர் புரி கிறேன். (வெளியில்) அடே ! நந்தன்மகனே ! மறுபடியும் என் கொழுப்பு மேலிட்டு நிற்கிறது.

தாமோதரன்—அப்படியா ' நில். நில். என் கைகளில் சிக்கிக் கொண்ட நீ கார்காலப் புயல் போல் கர்ச்சிக்கிருயே ? வா

தள்ளுகின்றேன். வச்சிரப் படையால் அடித்து வீழ்த்தப் பட்ட மைமலையின் முடிபோல் பூமியில் விழுந்து நொருங்கு வாயாக. (அவ்வாறு செய்து)

கண்களில் வாயில் மூக்கில் குருதிநீ ரிட்டுப்பாய
விண்ணெழு வாலும் காலும் செவிகளும் கொண்டைதானும்
துண்ணெனத் துடிக்க வீழ்ந்து புவியினி லுயிரும் நீங்கித்
தண்மையில் வச்சி ரம்கொல் மலையெனப் புரளுகின்றான். 5

(நுழைந்து)

தாமகன்—யசமானே! சுபம் உண்டாவணும். யமுனை மடுவுலெ காளியன்னு ஒரு பெரிய பாம்பு வெளியிலெ வந்திருக்கூன்னு கேட்டு, அண்ணன் பலராமன் மலேலிருந்து அங்கெ போயி ருக்காரு. நீங்க அவரெ அங்கெ போவாணும்னு தடுங்க, தடுங்க.

தாமோதரன்—காளிய னென்பவன் கொழுப்பு மிக்க பாம்பரையன் என்று நானும் கேட்டிருக்கிறேன். இருக்கட்டும். அவன் கொழுப்பை யடக்குகிறேன்.

ஆனிரை யந்தணர் மற்றும்
கானிடை மக்கள் களிப்பர்
வானொளி மங்கி யடங்கித்
தானினி யவனுமி ருப்பான்.

மூன்றாம் அங்கம் முற்றிற்று.



# நான்காம் அங்கம்

(*தாமோதரன் தோன்றுகிறான்*)

தாமோதரன்—

*அஞ்சிகுழ ரும்மொழிய ராகியணி யாடை*
*வஞ்சியுடல் நின்றுவில கப்பரப ரத்து*
*விஞ்சுமழ காயமுலை யாயர்சிறு பெண்கள்*
*நஞ்சுடைய நாகமடு நோக்கிவரு கின்றார்.* 1

*மதமுடைய நிலாமுகிற்புட் போன்ற தம் கண்கள் மருள, கூந்தலவிழ்ந்து புரள, செவ்விய வுதடு துடிக்க, இவ்வாயர்மங்கையர் என்னைப் பின் தொடர்ந்தோடி வருகின்றனர்.*

ஆயர்மங்கையர்—(*தோன்றி*) *நாத! வேண்டாம். இம் மடுவில் இறங்க வேண்டாம். இது கொடிய பாம்புக் கூட்டத்திற் குறைவிடம்.*

தாமோதரன்—*துயரம் வேண்டாம். பாருங்கள்.*

*அலையெழும் நீரின் பெருமையை யருகில்*
*அஞ்சிய களிற்றினம் நோக்க*
*விலங்குபுள் ளினங்கள் வெருவிவிட் டகல*
*விளங்குநீ ரிக்கடல் மடுவை*
*மலங்கிய வாயர் சிறுமியர் மதுர*
*மொழிகளால் என்றனைத் தடுக்கக்*
*கலக்கியங் குறையும் காளியன் தன்னைக்*
*கனல்விற லழித் தொழித் திடுவேன்.* 2

ஆயர்மங்கையர்—*நாதா! பலராமா! நீ கண்ணனை விரைந்து விலக்கு*

பலராமன்—(*தோன்றி*) *அஞ்சி வருந்த வேண்டாம். அன்பை யறிந்தோம். இப்பொழுதே பாருங்கள்.*

*தன்முகம் நின்றெழு நஞ்செனும் வெங்கனல் சோதிகளால்*
*திங்முக மொன்றும்வி டாதுசி வந்துப டும்கொடியன்*
*பன்னக ராயனி வண்வரு கண்ணன்வி ரைவுணராச்*
*சென்னித ளர்ந்துவி ழும்வகை யேங்கிவ ணக்குகிறான்.* 3

ஆயர்மங்கையர்—ஆம்! நாதன் கண்ணன் அத்தகையன் தான்.

தாமோதரன்—மக்கள் நன்மைக்காக இப்பாம்பை விரைவில் என் வசமாக்குகின்றேன்.

(மடுவில் குதிக்கிறான்)

ஆயர்மங்கையர்—ஐயோ! ஐயோ! புகை கிளம்புகிறதே!

தாமோதரன்—இம்மடுவின் ஆழந்தான் என்னே!

பரந்து விரிந்த கருந்துகில் போல்
புரந்த ரநீல முருக்கிய போல்
நிரந்த திரையமு னைமடு வுள்
விரிந்த விடத்தீ யாக்கிடு வேன். 4

(மறைகிறான்)

ஆயர்கிழவன்—(தோன்றி) ஐயோ! கண்ணா! பொண்புள்ளேங்க தடுத்தாகூட சட்டபண்ணாதெ மடுவுலெ எறெங்கூட்டயெ! துணிஞ்சு எறெங்கக்கூடாதெ! யானெ புலி பன்னி யெல்லாம் இந்தத் தண்ணியெக் குடிச்சு அங்கங்கயெ விழுந்து சாவுதெ! கண்ணனெக் காணமே! என்ன செய்வேன்! இருக்கட்டும். இந்தக் கொடமுருக்கமரத்து மேலெ ஏறி நல்லா பாக்கறேன். ஐயோ! ஐயோ! பொக கௌம்புதே.

பலராமன்—பாருங்கள் நீங்கள். நம் கண்ணன் இம்மடுவின் நீரை அடியுடன் கலக்கி இக் கொடிய கருநாகத்தைப் பற்றி, அதன் தலை மேல் ஏறி நிற்கிறான். வாசவன் முகிற்தலையில் நிற்பது போல் இருக்கின்றது.

ஆயர்கிழவன்—(களி முறுவல் செய்து) நல்லது நாதா! நல்லது.

தாமோதரன்—(காளியன் தலை மேல் தோன்றி.)

இக்கருங் காளியன் வன்செருக் குலையநான்
திக்கரித் தவனுடை விடமுடைப் பணமதில்
மிக்கெழும் கொடிகரத் தோடுதா ளொன்றினால்
தக்கவல் லீசகம் லலிதமோ டாடுவேன். 5

ஆயர்மங்கையர்—விந்தை! நாதா! விந்தை! (ஒருவர்க் கொருவர்) காளியனுடைய ஐந்து படங்களையும் அடக்கி அமுக்கி அல்லீசகம் ஆடுகிறான்.

தாமோதரன்—நான் இங்கிருந்தே பூக்கள் கொய்கிறேன்.

காளியன்—ஆகா !

சக்கர வாகமெ னும்மலை வலயம்
இப்பெரு நிலவுல கம்சூழ் வதுபோல்
முக்கண ரைர்பெரு வில்லினை நாணும்
அப்பணி, மந்தர மலைசூழ்ந் ததுபோல்
மிக்குயர் இந்திர னார்கரி கரமேய்
இப்பெரு மென்னுடல் கொண்டு வலித்தே
இக்கண யேயான் இந்திர னுறையா
வப்பெரு நாடுநி னையடை விப்பேன். 6

ஆயர்கிழவன்—ஐயோ ! ஐயோ ! யசமானே ! நம்ம சின்ன யசமான் தாமோதரன் யமுனயே உருமாறி வந்தாப்போலெ யிருக்கற இந்தப் பாம்புமேலே பூமாதிரி தங்காலெ வச்சு அமுக்கிகிணு பூப்பரிக்கிருன். நல்லாயிருக்கு யசமான் நல்லா யிருக்கு. மெரிச்சு முறிச்சூடுங்க முறிச்சூடுங்க. நானும் தொணெவரென். ஐயோ ! ரொம்ப பயமாயிருக்கு. நந்த கோபர்கிட்ட இந்த சேதியெப் போய்ச் சொல்றேன்.

(போகிருன்.)

தாமோதரன்—

[1]கான்யாறென் றுயிர்த்ததெனத் திரண்டு நீண்ட
காயத்தோ டாசிதனில் நஞ்சும் கொண்டு
மேன்மே லும் மிகப்பெருகும் செருக்கு மிக்கு
வியாது நனிகனன்று சீறும் நின்னை
மீன்முதலை முதலியவை யிறந்தொ ழிந்த
மிகவாழ்ந்த வியமுனை மடுவுள் நின்று
பான்மாறு திப்பொழுதே வலித்தி ழுத்து
மண்மிசையான் தலையின்றி வீழ்த்து வேனே. 7

காளியன்—அடேய் ! சினக்கனல் குமுறு மென்னுடல் நின்றெழும் புகையே இம்மண்ணுலகை யெரித்தழிக்கும். அத்தகைய யான் என் சினத்தீயால் உன்னை எரிக்கிறேன். விண்ணும் மண்ணுமுன்னைக் காப்பாற்றுக.

---

1. காயம் - உடல். ஆசி - பல். பால்மாறு து - ஆலோசியாது.

தாமோதரன்—காளிய! வலியுளனாயின் என் இவ்வொரு தோளை எரிப்பாயாக.

காளியன்—ஹாஹாஹா. நாற்புறமும் கடல்சூழ்ந்த இம்மண்ணுலகை அதன் குலப்பருப்பதங்களுடன் எரிக்கவல்ல யான் உன் சிறியதோளைக் கொளுத்த வல்லேனல்லனோ? உம் நில். இப்பொழுதே உன்னைப் பொசுக்குகிறேன்.

(நச்சுத்தீயைக் கக்குகிறான்.)

தாமோதரன்—ஆஹா! வன்மையை நன்கு காண்பித்தனை.

காளியன்—அருளுக. அருளுக. பரமனே! நாரணனே!

தாமோதரன்—இச்சிறு வலிமைக்கா இத்துணை செருக்கு?

காளியன்—பரமபுருடா! அருள வேண்டும்.

பருப்பதம் எடுத்தும் பகரிணை யற்றும்
பருப்பதம் ஒத்தும் பெருமுல களித்தும்
பெருந்திறல் பெற்று விளங்கு முன்தோளை
எரித்தழிக் கவெனக் கெவ்வா றியலும்?
தரமறி யாதுன் தகைமை யொறுத்தேன்
சரணமா யடைந்தேன் மனைவிக ளோடும்
பரமனே போற்றி பரமனே போற்றி
அருமுயி ரளிப்பாய் பரமனே போற்றி. 8

தாமோதரன்—காளிய! எதற்காக நீ இம்மடுவில் உறைகிறாய்?

காளியன்—தங்கள் சீரிய ஊர்தியாம் கலுழனிடமிருந்து பயந்து யான் இம்மடுவில் ஒளிந்துறைகிறேன். தங்களருளால் அவ்வச்சம் எனக்கு நீங்கல் வேண்டும்.

தாமோதரன்—அங்ஙனமே யாகுக. பாம்பரைய!

உன்னுடை முடியில்
என்னுடை யடியின்
சின்னமு ளதுகண்
டன்னவ னருளும். 9

காளியன்—அருள் பெற்றேன்.

தாமோதரன்—உள்ளே செல்வாயாக.

காளியன்—ஆணை.

தாமோதரன்——அல்லது இங்கே வா.

காளியன்—பகவானே ! இதோ வந்தேன்.

தாமோதரன்—இன்று முதல் ஆவும் அந்தணரும் முதலான அனைத் துலகிடமும் நீ கவனமுடன் நடந்து கொள்ள வேண்டும்.

காளியன்—பரம! என்னுடைய நஞ்சால் இந்நீர் கெட்டு விட்டது. ஆதலின் இப்பொழுதே அந்நஞ்சைத் தீரவிலக்கி இம்மடுவி னின்றே வெளிக்கிளம்பி விடுகிறேன்.

தாமோதரன்— அவ்வாறே திரும்பிச் செல்வாயாக.

காளியன்—பரம புருட ! நாராயண ! ஆணைப்படியே. (பரிசனங்க ளுடன் வெளிச் சென்று விடுகிறான்.)

தாமோதரன்—நானும் மடுவிலிருந்து கொய்த மலர்களை ஆயர்சிறுமி களுக் களிப்பேன்.

ஆயர் மங்கையர்—நம் நாதன் உடல்நலம் கெடாது நம் உள்ளம் களிக்க இதோ வருகின்றான். நாதன் வெற்றிபெறுக.

பலராமன்—நல்வினைவசமாய் அந்தணர்க்கும் ஆவினத்திற்கும் நன்மை இழைக்கப்பட்டது.

தாமோதரன்—மலர்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆயர் மங்கையர்—நாத ! இம்மலர்கள் முன்பு முனிவர்குழாம் கொய்தவையல்ல. இரவியும் திங்களும் தங்கள் கரங்களால் தீண்டியவையல்ல. ஆதலின் அஞ்சுகின்றோம்.

தாமோதரன்—முன்பு பன்முறை பயந்துள இவர் மிகவும் நடுங்கு கின்றனர். ஐயோ ! பாவம் ! அஞ்ச வேண்டாம். என்கை களால் தீண்டப் பெற்ற இம்மலர்கள் இப்பொழுது கொடுமை யிலவாயின. வாங்கிக் கொள்ளுங்கள்.

ஆயர் மங்கையர்—நாதன் ஆணை.

(பணியாள் தோன்றி)

பணியாள்—கோபாலக ! நந்தகோபன் சிறுவன் எங்கு சென்றான் ?

ஆநிரைபாலன்—இதோ எங்கள் தலைவன் காளியன் என்னும் பெரிய நாகத்தை வருத்திய பின் ஆயர்மங்கையர் சூழநிற் கின்றான்.

**பணியாள்**—(நெருங்கி) நந்தகோபன்சிறுவ! பொருந்திய பெயுரன் அரசர் பெருமான் உக்கிரசேனரின் புதல்வன் கஞ்சன் உனக்காணையிடுகின்றான்.

**தாமோதரன்**—ஆணையிடுகின்றான்! என்னவென்று?

**பணியாள்**—மதுரையம்பதியில் வில்விழாவெனும் ஓர் விழா நடக்கப் போகின்றது. அதைக்கண்டு களிக்க நீவிர் இருவரும் பரிசனங்களுடன் வரவேண்டுமென்று.

**தாமோதரன்**—(பலராமனை நோக்கி) ஆரிய! நாம் தேவர்பணியாற்ற வேண்டிய மறைதருணமன்றோ விது.

**பலராமன்**—இப்பொழுதே விரைந்து செல்வோம்.

**தாமோதரன்**—திண்ணம். சிறந்த முடிவு.

உத்தம விரத்தின முடித்திரள்
மயிர்ச்சிதறி டத்தலையி னின்றுவிழவே
முத்துமணி யாரமொடு மேகலைம
ணிக்கயிறு தோள்வளை யறுந்துபடவே
மத்தக தலத்தினிடை பாய்களிறு
கொல்லுமொரு முத்திறல் விலங்கரசுபோல்
இத்தருண மொப்பில்மத கஞ்சனையி
ழுத்தழி தரக்கடித்து கொன்று விடுவேன். 11

(எல்லோரும் வெளியேறுகின்றனர்.)

**நான்காம் அங்கம் முற்றிற்று.**



# ஐந்தாம் அங்கம்

(அரசன் தோன்றுகிறான்)

அரசன்—

பரந்ததோர் துணிவும் வன்மையும் வலியும்
பெற்றிவண் நந்தகோ குலத்தில்
திரிந்தவன் முதிய தோன்றலா மண்ணல்
இராமனென் பவனுடன் கூடிக்
[1]கரும்திரை வயிற்றன் கண்ணனை யின்று
வில்விழா வென்றுயா னழைத்துப்
பெருந்திறல் மல்லர் கொண்டுமல் லரங்கில்
கொன்றுளங் களித்துவாழ்ந் திடுவேன். 1

துருவசேன! துருவசேன!

(தோன்றி)

பணியாள்—மன்னர் பெருமான் வெற்றியுறுக.

அரசன்—நந்தகோபன் குமரன் வந்துவிட்டானா?

பணியாள்—செவி சாய்த்தருளுக. இடையர்குழாம் சூழப் பலராமனுடன் மதுரையில் நுழையும் பொழுதே தாமோதரன் வண்ணான்களிடமிருந்து ஆடைகளை வலித்துப் பறித்துக் கொண்டான். அதை அறிந்து மகாமாத்திரன் அவனைக் கொல்வதற்காக உற்பலாபீடம் என்னும் மதகளிற்றை ஏவினான். பிறகு,

பாக்கிய மிழந்து மலைபோல் மிகவிரைவின்
நோக்கிவரு மக்கரியை யக்கரிய பாலன்
தாக்கியதன் கொம்பதனை வேருடன் பறித்துப்
போக்கினா னடித்துநனி யஞ்சிடையர் நடுவண் 2

அரசன்—கொன்றே விட்டானா? விரைந்து செல். மேல் நிகழ்ச்சிகளை யறிந்துவா.

பணியாள்—உத்தரவு.

1. திரைவயிற்றன் - தாமோதரன்.

(சென்று வந்து)

மன்னர் பெருமான் வெற்றியுறுக. இந் நந்தகோபன் சிறுவன் விழாவிற்காக உயர்த்திய நெடுங்கொடிகளாலும் ஆங்காங்கு தொங்க விடப்பட்டுள்ள பூந்தொடைகளாலும் அணிபெற்றுக் காரகில் மணங்கமழும் அரச வீதியில் வரும்பொழுது, மாளிகைவாயிலில், கையில் நறுமணப் பெட்டியோடிருந்த மதனிகை யென்னும் கூனியைப் பார்த்து அவள் கையிலிருந்த நறுமணச் சந்தனக் குழம்பை வாங்கிப் பூசிக் கொண்டான். அதே கையால் அவள் கூனைத் தடவி நிமிர்த்தினுன். பூக்கடைகளிலிருந்து பூந்தொடைகளை யெடுத்துச் சூட்டிக் கொண்டான். இப்பொழுது வில் விழவுசாலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிருன்.

அரசன்—அவன் என்னென்று நினைத்துக் கொண்டிருக்கின்ருன்! (பணியாளை நோக்கி) விரைந்து செல். மேல் நிகழ்ச்சிகளையு மறிந்துவா.

பணியாள்—அரசன் ஆணை. (சென்று வந்து) அரசர் பெருமான் ? வெற்றியுறுக. வில்மன்றக் காவலன் சிம்பரலன் தடுக்க, அவனைக் கன்னத்தில் அறைந்து கொன்றுவிட்டு உள்ளே நுழைந்து வில்லையெடுத் திரண்டாக்கிவிட்டு இப்பொழுது உபத்தானம் நோக்கி நடந்து கொண்டிருக்கின்ருன்.

புயல்எனும் திரு நிறத்தான் பீதக வாடை சாற்றி
மயில்மணிப் பீலி யோடு மலரணி மாலை சூடி
வியப்புறு தோற்றத் தோடு வெஞ்சினம் புரளும் கண்ணன்
இயமனே யிழிந்தான் போன்றங் கிராமனோ டேகு கின்ருன்.3

**அரசன்—உள்ள முலைவுறுகின்றது.** சென்று முற்கூறிய சாணூரனையும் முட்டிகனையும் இங்கு வரச்சொல். விருட்டிணி குலத்தவரைச் சித்தமாயிருக்கச் சொல்.

பணியாள்—**அரசன் ஆணை.**

(வெளிச் செல்கிருன்)

**அரசன்—யானுமதற்குள்** மாளிகையின் மேற்கட்டை யடைந்து சா ர முட்டிகர்களுடைய போரைப் பார்க்கிறேன். (ஏறி) **மதுரிகா! கதவைத் திற.**

பணியாள்—மன்னருடைய ஆணைப்படி.

(அரசன்சென்றமருகின்றான்; சாணூரமுட்டிகர் வருகின்றனர்.)

சாணூரன்—

மதம்புடிச்ச ஆனபோல மண்டக்கொ யுப்புடனே
சண்டைக்கிப் போதயாரா துண்டமா வந்துவுட்டேன்.
கண்டூந டுங்குமந்தக் கண்ணன் சின்னப்பயலெ
சண்டபோட்ற மோடேலெ துண்டுதுண் டாக்கிடுவேன். 4

முட்டிகன்—

எம்பேரு முட்டிகன் என்கைமுட்டி யிரும்புதான்
குண் ணுதலயெ வச்சிரம் சுண்ணமாக்க ருப்பலெ
சின்னப்பையன் ராமனெ கொண் ணுதள்ளிப் பூடுவென்
கொண் ணுதள்ளிப் பூடுவென்மென் னுதின் னுப் பூடுவென். 5

பணியாள்—மன்னர் பெருமான் இங்கிருக்கின்றார். இருவரும் அருகு செல்லுங்கள்.

இருவரும்—(அரசனை நெருங்கி) ராசாவுக்கு சயம் உண்டாகணும்.

அரசன்—சாணூர முட்டிகர்களே! முழு முயற்சியுடன் நீங்கள் இருவரும் கடமையாற்ற வேண்டும்.

இருவரும்—ராசா கேக்கணும். கையி காலு இதுமாதிரி எடங்கள்ள இருக்கற மூட்டுங்கள்ள அடிகுடுத்து பெரிய சண்டை செய்து நெறவேத்தறம். உம். யசமான் பாக்கணும்.

அரசன்—திண்ணம். அவ்வாறே செய்யுங்கள். துருவசேன! இடைச் சிறுவர்களை உள்ளே புகவிடு.

பணியாள்—மன்னர்பிரான் ஆணை.

(வெளிச்செல்கிறான்.)

(துருவ சேனனுடன் தாமோதரனும் பலராமனும் மல்லரங்கில் புகுகின்றனர்.)

தாமோதரன்—ஆரிய!

முற்பிறப் பவுணனு மிக்கொடுங் கஞ்சனை
மற்பொரு களத்தியான் கொன்றுவீழ்த் தாவிடின்
பற்பல செயல்களும் மாணிடப் பிறவியும்
நற்பய னின்றியே நன்னிலை யழிவுமாம். 6

பலராமன்—

*மற்களம் புக்கியான் வல்லயப் பிடியொடும்*
*பற்கடிப் புடைபெரும் வெஞ்சினத் தொடும்வரும்*
*எற்பகை முட்டியை, இன்றுகூ றைப்புயல்*
*சிற்புனல் முகிலெனப் பற்றிமாய்த் தாடுவேன்.* 7

பணியாள்—*இதோ மன்னர் பெருமான். இருவரும் அருகு செல்லுங்கள்.*

இருவரும்—*ஆகா! யாருக்கு மன்னன்!*

பணியாள்—*உலகனைத்திற்கும். நமக்கும்.*

தாமோதரன்—*இன்றுமுதல் இல்லை.*

பணியாள்—*மன்னர் பெருமான் வெற்றியுறுக. இதோ அச்சிறுவர்கள்.*

அரசன்—*இவனோ அத் தாமோதரன்? ஆச்சரியம்!*

*கருநிறன் அழகுவள் களிற்றெழில் நடையினன்*
*திருமகிழ் மாண்பினன் விரிமணி மார்புடன்*
*உருதிறற் றோளினன் உலகுமூன் றொருநொடி*
*உருவமாற் றிடவலான் முற்செயல் விந்தையோ!* 8

*அழகும் மாண்பும் ஒருங்குபொருந்திய இவனன்றோ கண்ணனண்ணனிராமனென்று யாம் இதுவரை கேட்டுளோம். இவன்*

*மறுவில்நீள் கமலக் கண்கள், மாசிலாத் திங்கள் மேனி,*
*சிறுமையில் நீல வாடை, சீரிய வெள்ளித் தாழ்போல்*
*திறலுறத் திரண்டு நீண்டு செவ்விதின் பருத்த தோள்கள்,*
*கறுத்தொளி பெற்றி லங்கும் குவளையங் கண்ணி யேய்ந்தான்*

தாமோதரன்—*ஆரிய! இவர்களே நம்முடன் மற்போர்புரிய விழைபவர் என்று நினைக்கிறேன்.*

பலராமன்—*அப்படித்தான் இருக்க வேண்டும்.*

அரசன்—*துருவசேன! போர் தொடங்கட்டும்.*

பணியாள்—*மன்னர்பிரான் ஆணை.* (மாலை போடுகிறான்).

மல்லவீரர்—*அடேய்! போர்முரசு கொட்டுக. கொட்டுக.*

சாணூரன்—*தாமோதரா! கிட்டவாடா, என் தோள்நடுவிலே சிக்கி உயிரை விட்டுறு.*

தாமோதரன்—

வந்திதோ நின்றேன் நீயென் கடுமையைப் பொறுத்து நிற்பாய்.

முட்டிகன்—டேய் ராமா! எம்முட்டியாலெ நொறுக்கி உன் உடல் லேருந்து ரத்தத்தெக் களப்பி அந்த ரத்த வெள்ளத்துலெ நீ முழுகி சாவும்படி பண்ணறேண்டா.

பலராமன்—

முந்திநா னுன்னை முட்டி! நமனிரை யாக்கு கின்றேன்.

(எல்லோரும் மற்போர் புரிகின்றனர்.)

தாமோதரன்—(சாணூரனைக் கொன்று)

என்பொடிந் திவனி றந்தான்...........

பலராமன்—

...........முட்டியை நானும் கொன்றேன்.

தாமோதரன்—

வெந்திடு கஞ்ச னைநான் மறலியூ ரனுப்பு கின்றேன். 10

(மேற்கட்டின் மீதேறிக் கஞ்சனை மயிர்பற்றி யிழுத்துத் தள்ளி)
இக்கொடும் கஞ்சன்

சேந்தகன்ற கடுமுகத்தன் சுழலும் கண்ணன்
சாய்ந்தொடிந்த தடந்தோளன் கையன் காலன்
வீழ்ந்தறுந்த பலவணிகள் புரள மண்மேல்
மாய்ந்துபட்டான் இடிவிழுந்த மலையீ தென்ன. 11

(திரையுள்.)

ஐயோ! ஐயோ! அரசர் பெருமான்...........

(மறுபடியும் திரையுள்)

ஓ விருட்டிணி வீரர்களே! அநாவிருட்டி! சீவகா! இருதிகா! பிருதுகா! சோம தத்தா! அக்குரூரா! மற்றுமுள்ள வீரர்களே! இதுவன்றோ உப்பிட்டவர்க்குதவும் காலம். விரைந்து வாருங்கள்.

தாமோதரன்—ஆரிய! சேனையை வளைத்துக் கொள்ளுங்கள்.

பலராமன்—இதோ வளைத்துக் கொள்ளுகிறேன்.

களிற்ற ததுரக பத்தியுடை
ஒளிமிகு படையுடை யிப்படையை
வளியலை நுரைமிகு திரைகடல்போல்
களிபுய மதுகொட லைத்திடுவேன். 12

(வசுதேவர் தோன்றி)

வசுதேவர்—ஓ மதுரை வீரர்களே! வீண் துணிவு வேண்டாம்.

இன்னவன் என்றன் மைந்தன் உரோகிணி பாலுதித்தான்
அன்னவன் அறிகி வீரோ! அன்னைதே வகியுமீன்றாள்.
என்னிது முயலு கின்றீர், படைகளால் பயனுமென்னும்
மன்னவன் கஞ்ச னுக்காய் மாதவன் தோன்றியுள்ளான். 13

பலராமன்—(பார்த்து) ஆ! நம் தந்தையன்றோ. அப்பா! இதோ பலராமன் வணங்குகின்றேன்.

தாமோதரன்—அப்பா! இதோ தாமோதரன் வணங்குகின்றேன்.

வசுதேவர்—இருவரும் விளிதலில்வெற்றி பெருக. நற்புதல்வர்பேற்றின் பயனை இப்பொழுதடைந்தேன்.

இருவரும்—அருள் பெற்றோம்.

வசுதேவர்—யார் அங்கு?

(பணியாள் தோன்றி.)

பணியாள்—ஆரியப் பெருமகன் வெற்றியுறுக.

வசுதேவர்—சவங்களை அகற்றுங்கள்.

பணியாள்—ஆரியன் ஆணை.

ஆயர் மக்கள்—ஓகோ! ராச்சியம் இடையர்களுக்கு வந்துவிட்டது.

வசுதேவர் யார் அங்கு?

பணியாள்—ஆரியப் பெருமகன் வெற்றி பெருக.

வசுதேவர்—'அரசர் பெருமான் உக்கிர சேனரைத் தளைவிலக்கி நீராட்டி இங்கழைத்து வா' என்று தாமோதரன் ஆணையிடுகின்றான் என்று விரைந்து சென்று அநாவிருட்டியிடம் கூறுவாயாக.

பணியாள்—ஆரியன் ஆணை. (வெளியில் செல்கிறான்.)

வசுதேவர்—ஆச்சரியம்!

முழங்கிடு தூரிய வோசையுடன்
பொழிந்திடு மலரின மாலையுடன்
பிழைத்திடு கஞ்சன ழித்தவனை
வழுத்திட விண்ணவர் வந்தனரே. 14

(திரையுள்)

பொன்னியல் மாளிகை மாடம் கோபுரம்
முன்னைய வாய்ந்திடு மிவ்வட மதுரையைத்
தன்னவர் காத்திடும் கமலக் கண்ணனைப்
பின்னவன் பிழையிலா தென்றும் காக்கவே. 15

வசுதேவர்—மதுரை மக்களே! செவியுறுங்கள். அவுணர் பெருமானாகிய கஞ்சன் ஆண்ட இந்நகரின் தாழ்ப்பாளை நீக்கியவனும், அவனுக்குதவ விரும்பிய அரசரனைவரையும் புறமுதுகிடச் செய்தவனுமாகிய என் அருமைப் புதல்வன் வாசுதேவனுடைய பெருங் கருணையால் மறுபடியும் அரசைப் பெற்றவராய உக்கிர சேனருடைய ஆணை இப்பொழுது எங்கும் பறையறிவிக்கப்படுகிறது.

அனைவரும்—விருட்டிணி குலவரசு நிலைபெற்றது.

வசுதேவர்—அரசர்பெருமானை யழைத்து வருக.

பணியாள்—ஆரியன் ஆணை. (வெளியில் செல்கிறான்.)

(உக்கிரசேனர் தோன்றுகின்றார்.)

உக்கிரசேனர்—

நீல மேனி நெடுந்தக வாளன்
காலனாற்றல் கஞ்சனைக் கொன்றான்
மாலைப் பெற்ற விந்திரன் போலக்
காணம் நின்ற சிறைத்துனி தீர்ந்தேன். 16

பகவனருளால் துயரக் கடல் கடந்தேன்.

(நாரதர் தோன்றுகின்றார்.)

நாரதர்—கஞ்சனைக் கொன்ற கண்ணனைப் புகழ்ந்து வழிபடுவதற்காகப் புத்தேளிர் ஆணையால் கந்தருவருடனும் அப்சரசுகளுடனும் தேவ லோகத்திலிருந்து இங்குவந்துளேன்.

தாமோதரன்—ஆச்சரியம்? தேவமுனிவர் நாரதர். தேவ முனிவரே நல்வரவு. பூசைநன்னீரும் திருவடிநீரும் பெற்றருளுக.

நாரதர்—அனைத்தும் பெற்றேன்.

(கந்தருவரும் அப்சரசுகளும் பாடுகின்றனர்.)

நாரணா! நாங்கள் வணங்கு கிறோம்
காரணா! தேவர் வணங்கு கிறார்
பூரணா! கஞ்ச னழிந்த தனால்
தாரணா! பாரினி வாழ்ந்தி டுமே. 17

தாமோதரன்—தேவமுனிவரே! பெரிதும் களிப்பெய்தினேன் இனியும் என்ன விருப்பம் என்றால் உமக்காக வேண்டும்

நாரதர்—

என்னிடத்துன் னுளமுகப்பின் இறைவா! வென்றன்
மன்னியசீர் முயற்சியெல்லாம் பயனு டைத்தே
உன்னடிக்கள் திருநிழலில் ஒதுங்கப் பெற்றேன்
பொன்னுலகம் புலவருட னடியேன் போவேன். 18

தாமோதரன்—வருக. பின்னும் தம் காட்சி பெறுவேனாக.

நாரதர்—தேவன் ஆணைப்படி.

(நாரதர் கந்தருவர் முதலியோருடன் மறைகின்றார்.)


(பரதவாக்கியம்.)

பனிபடு மலையும் விந்தியக் கிரியும்
இனியகா தணியாய் என்றுமே யிலங்கும்
நனிபெருங் கடல்சூழ் வையக மெல்லாம்
புனையொரு குடைக்கீழ் நம்மர சளிக்க. 19

(எல்லோரும் செல்கின்றனர்.)

ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

பாலசரிதம் முற்றிற்று.



# அருஞ்பத அகராதி

அகழ் - அகழி, ஜலதுர்கம்
அணங்கு - தெய்வம்
அண்ணல் சிறந்த பெருமையுள்ளவன்
அண்மை - சமீபம்
அந்தகன் - இயமன்
அந்தணர் - பிராமணர்
அபயம் - அச்சமின்மை
அயப்பிடி - இரும்புப்பிடி
அரக்கன் - இராக்கதன்
அரவு - பாம்பு
அரி - பகை
அலகு - அளவு
அல்லீசகம் - நடுவில் ஒருவரும் சுற்றும் பலருமாக இருந்து ஆடும் கும்மி கோலாட்டம் போன்ற ஒரு விளையாட்டு
அவுணர் - அசுரர்
அழிகவுள் - மதநீர் இடைவிடாது ஒழுகுதலால் தனதியற்கை அழிந்த, யானையின் கன்னம்
அளிப்போன் - காப்பாற்றுபவன்
அறவொழுக்கம் - நன்னடத்தை
அனுங்கல் - முட்டல், எதிர்த்தல்
ஆசி - விஷப்பல்
ஆணை - கட்டளை, சபதம்
ஆண்தகையன் - ஆண் தன்மையுள்ளவன்
ஆதவன் - சூரியன்
ஆர்ப்பு - ஆரவாரம்
ஆழி - சக்கரம், திருமாலின் வலது கையிலுள்ள வட்ட வடிவமுள்ள படை
ஆனிரையர் - இடையர்
இணை - உவமை
இரவி - சூரியன்
இராகு - நவக்கிரகங்களுள் ஒன்று
இலைமலி... - சித்திர வேலைப்பாடு அமைந்த...
இல்லம் - வீடு

இறை - கடவுள்
உபத்தானம் - ஓர் இடம்
உபேந்திரன் - இந்திரன் தம்பியாக இந்திரன் அவையில் இருக்கும் விஷ்ணுவின் ஓர் அவதாரம்
உலகியல் - உலக வியற்கை, உலக நடவடிக்கை
உவளகம் - அந்தப்புரம்
உள்ளம் - மனது
ஊக்குதல் - பிரயோகித்தல்
ஊர்தி - வாகனம்
ஊழி - யுகம்
எயிறு - வாய்க்கோடு
ஓதம் - கடற்றிரை
கஞ்சன் - உக்ரசேனரின் புதல்வன் கம்ஸன்
கஞ்சன் பாறை - (கம்ஸசிலா) கொலை பாறை
கந்தருவர் - தேவ சாதியில் ஒரு பிரிவு
கரம் - கை
கரவு - முதலை
கரி - யானை
கரு - கருப்பம்
கருவுயிர்த்தல் - ஈனல் - பிள்ளை பெறுதல்
கருவூலம் - பொக்கசம், தனசாலை
கலுழன் - கருடன்
களிற்றினம் - யானைக் கூட்டம்
கறு நெய்தல் - ஆம்பல் பூ
கனல் - நெருப்பு
கனலுதல் - காய்தல் (சினத்தல்)
கன்னல் - பாயஸம்
காயம் - உடல்
காரகில் - சந்தன வகை
காலன் - இயமன்
காளராத்ரி - ஊழி முடிவில் தோன்றும் இருண்ட இரவு
கிரணம் - கதிர்
குருதி - இரத்தம்

தழலு - குழந்தை
தழாம் - கூட்டம்
கோவளமாலை - (குவளை மாலை) நெய்தல் மாலை.
கோலாகலம் - (களிப்புடன் கூடிய) ஆரவாரம்
சாந்தி - அமைதி
சாம்வச்சரிக புரோகிதர் - காலபலன் உரைக்கும் புரோகிதர்
சிகரம் - முடி, உச்சி
சிரஞ்சீவி - நீடு வாழ்பவன்
சிறை - இறகு
சின்ன பின்னம் - கண்ட துண்டம்
சின்னம் - அடையாளம்
சீற்றம் - சினம்
சுடலை - சுடுகாடு
சுண்ணம் - பொடி
சூத்திரதாரன் - நாடகத்தை நடத்து பவன்
சூளுறவு - பிரதிக்கினை
செரு - போர்
சென்னி - தலை
சேந்து - சிவந்து
டிண்டிமம் - ஒரு வகை வாத்தியம்
தகவு - தயை
தரு - மரம்
தளை - விலங்கு
தாரணன் - (ஆறு முதலியவைகளைக்) கடத்துபவன்
திக்கரித்தல் - அச்சுறுத்தி அடக்குதல்
திங்கள் - சந்திரன்
திங்முகம் - திசை முகங்கள்
திரு - அழகு, இலக்குமி.
திருவடிநீர் - பாத்ய தீர்த்தம் (கால் கழுவக் கொடுக்கும்) தண்ணீர்
திரை - அலை
திறல் - வலி
தீவர்த்தி - எரி பந்தம், கை விளக்கு
துகில் - பட்டு
துந்துபி - ஒரு வகை வாத்தியம்
துரகம் - குதிரை
துறக்கம் - தேவலோகம் (பிரமலோகம்)

தூயன் - சுத்தன்
தூரியம் - பல வாத்தியங்கள் ஒன்று சேர்ந்தது. வாத்தியப் பொது
தெய்வப் பிரதிமை - கேட்டை ய[...] விக்கும் பெண்பிசாசு முதலியன
தெவ்வு - பகைஞன்
தைவிகக் குறி - சகுனம்
தோன்றல் - ஆண்மகன்
நஞ்சு - விஷம்
நலம் - சுகம்
நள்ளிருள் - நடு இரவு
நிமித்தம் - காரணம்
நிரந்த - நெருங்கிய, செறிந்த
நிலமங்கை - பூமிதேவி
நீடு வாழ்தல் - நீண்ட ஆயுள் படை[...]த்து வாழ்தல்
நீற்றுதல் - சாம்பலாக்குதல்
நுகர்த்தல் - அனுபவித்தல்
நுதி - முனை
நெறி - வழி
படலம் - திரள், கூட்டம்
படை - ஆயுதம்
பணம் - பாம்பின் படம்
பணி - பாம்பு
பதாதி - காலாட்படை
பதுமம் - தாமரைப் பூ
பத்தி - காலாள்
பரிவாரம் - பரிஜனங்கள்
பருப்பதம் - மலை
பன்னகராயன் - பாம்புகளின் தலை[...]வன்
பாம்பரையன் - பாம்புகளின் தலை[...]வன்
பான்மொழியர் - இனியமொழி பேச[...]பவர்
பிறை - சந்திரகலை
பீசம் - வித்து
பீதக வாடை - மஞ்சள் ஆடை
பீலி - மயில் தோகைக் கண்
புண்ணிய ஜனம் - இராக்கதர் அசுர[ர்] முதலியோர்
புத்தேளிர் - தேவர்
புரந்தர நீலம் - இந்திர நீலக்கல்
புலி - புலி

புள் - பட்சி
பூசை நீர் - அர்க்ய தீர்த்தம் (கைகளில் கொடுக்கப்படும்)
பூந்தொடை - பூ மாலை
பேதை - ஏழை (அடிமை)
பொருந்திய பெயரான் - பெயருக்குத் தகுந்த பண்புமுதலிய வுடையவன்
பொறை - பாரம், சுமை
மகவு - குழந்தை
மகிமை - பெருமை
மட்டு - அளவு
மதுசூதனன் - மதுவெனும் அசுரனை யழித்த திருமால் (கிருட்டிணன்)
மரக்கலம் - கப்பல்
மரபு - சாதி
மருங்கு - இடை (வில்லின் நடுப்பிடி)
மரை - தாமரை (முதற் குறை)
மலங்கல் - கலங்கல், அஞ்சுதல்
மலர் - பூ
மல்லரங்கு - மற்போர் புரியுமிடம்
மறத்தொழில் - தீயசெயல் (ஸாஹஸம்)
மறநெறி - பாபமார்க்கம், தீயநெறி
மறம் - வீரம்
மறலி - இயமன்
மறுக்கம் - மனக்குழப்பம், சாந்தியின்மை
மறை - வேதம், நான்முகன் சொல்
மன்றம் - அவை
மா - குதிரை(ப்படை)
மாண்பு - பெருமை (காம்பீர்யம்)
மாதிறல் - பெரும் வலியுள்ள
மாயவன் - கண்ணன், திருமால்
மானம் - அளவு
மிடல் - வலி
முக்கணான் - உருத்திரன்
முக்காரவொலி - எருது போர் விளைக்கும் குறியாம் ஓசை
முரசு - ஓர் வாத்தியம்
முழை - குகை
முறுவல் - சிரிப்பு
மூதேவி - சேட்டை, இலக்குமியின் அக்காள்
மூர்க்கர் - கீழ் மக்கள்
மேகலை - இடையாடையின் மே[ல்] தரிக்கக் கட்டப்பெறும் ஓர் அ[ணி]
யாழ் - வீணை
யாறு - நதி
யான் - வாகனம் (யானமென்பதின் திரிபு)
யுத்தம் - சண்டை
லலிதம் - நர்த்தனத்தில் ஒரு வ[கை]
வக்கரம் - வளைவு
வச்சிரம் - இந்திரன் ஆயுதம்
வம்பு - மணம்
வழுத்தல் - துதித்தல்
வளி - காற்று
வாசவன் - இந்திரன்
விதி - தெய்வம்
விருட்டிணிகுலம் - க்ருஷ்ணன் வம்சம், யாதவகுலத்தின் ஓர் பிரிவு
விழா - உற்சவம், உத்ஸவம்
விழி - கண்
விளிதல் - அழிவு
விறல் - வலிமை
வினை - விதி
வீணா தகையன் - வீணை தன்னையுள்ளவன்
வைப்பு - அடைக்கலப் பொருள்
வையகம் - பூமி

# பாக்கள் முதற்குறிப்பு


| பாக்கள். | பக்கம். | பாக்கள் | பக்கம். |
|---|---|---|---|
| அஞ்சிறி குழரும் | 31 | நாரண | 44 |
| அலைதிரை | 16 | நாராயணுய | 3 |
| அலையெழும் | 31 | நானுனக்கு | 9 |
| அறுவரென் | 18 | நீலமேனி | 43 |
| ஆனிரை | 30 | பரந்து | 32 |
| இக்கரும் | 32 | பரந்ததோர் | 37 |
| இருளடர்ந்த | 5 | பருப்பதம் | 34 |
| இன்னவன் | 42 | பனிபடு | 44 |
| உடலெங்கும் | 5 | பாக்கியம் | 37 |
| உத்தம | 36 | பாலு கொடுக்கும் | 25 |
| உமையின் திரு | 21 | பாற்கடலில் | 11 |
| உலகழிக்கும் | 29 | பான்மொழியர் | 26 |
| உன்னுடை | 34 | புயல் எனும் | 38 |
| எல்லையில் | 2 | பொழியும் | 1 |
| என்னிடத்துன் | 44 | பொன்னியல் | 46 |
| கண்களில் | 30 | மதம்புடிச்ச | 33 |
| கரவுடன் | 6 | மலைமகள் | 21 |
| கருநிறன் | 40 | மறிகடலில் | 14 |
| கருவுயிர்த்த | 3 | மறுக்கம் | 2 |
| களிறிர | 42 | மறுவில் நீள் | 40 |
| காற்றினும் | 22 | மற்களம் | 40 |
| கான்யாறு | 33 | மாண்டதொரு | 20 |
| கொடிய சண்டாள | 15 | மாதவன் தன் | 10 |
| சக்கர | 33 | மாயவன் | 11 |
| சங்கென | 1 | முக்கார | 28 |
| சினந்துயான் | 14 | முழங்கிடு | 43 |
| சும்பனை | 21 | முற்பிறப்பு | 39 |
| சூரத் தொழில் | 21 | முன் பிறந்த | 5 |
| செருமுகத்தில் | 11 | யானறிவேன் | 12 |
| சேந்தகன்ற | 41 | யானேயவ் | 10 |
| தன்முகம் | 31 | வந்திதோ | 41 |
| | | விட்டுவின் | 10 |

SVDU